***Some Inputs for Draft***

***National Education Policy***

***2016***

**Ministry of Human Resource Development**

**Government of India**

# “தேசிய கல்விக்கொள்கை 2016 வரைவிற்கான சில உள்ளீடுகள்” ஆவணத்திலிருந்து கொள்கை முன்மொழிவுகள்

தமிழாக்கம்

பி.இரத்தினசபாபதி

மக்கள் பதிப்பாக வெளியிடுபவர்கள் :

பொதுப் பள்ளிக்கான மாநில மேடை

State Platform for Common School System (SPCSS-TN)

*Some Inputs for Draft*
*National Education Policy*
*2016*

**Ministry of Human Resource Development**
**Government of India**

# “தேசிய கல்விக்கொள்கை 2016 வரைவிற்கான சில உள்ளீடுகள்” ஆவணத்திலிருந்து கொள்கை முன்மொழிவுகள்

தமிழாக்கம்
பி.இரத்தினசபாபதி

தமிழகக் கல்வி ஆராய்ச்சி வளர்ச்சி நிறுவனம், சென்னை -600024

மக்கள் பதிப்பாக வெளியிடுபவர்கள் :
பொதுப் பள்ளிக்கான மாநில மேடை
State Platform for Common School System (SPCSS-TN)

# நூற்குறிப்பு


| | |
|---|---|
| நூலின் தலைப்பு | தேசிய கல்விக் கொள்கை முன்மொழிவுகள் தமிழாக்கம் |
| மொழிபெயர்ப்பாளர் | **பி.இரத்தினசபாபதி** |
| நூல் உரிமை | பொதுப்பள்ளிக்கான மாநில மேடை, சென்னை |
| பதிப்பு | முதல், 2016 |
| தாள் வகை | டெம்மி, வெள்ளை. 70 ஜி.எஸ். எம். |
| பக்கங்கள் | 32 |
| எழுத்தளவு | 10 புள்ளிகள் |
| நன்கொடை | ரூபாய் 10/- |
| பதிப்பகம் | தமிழகக் கல்வி ஆராய்ச்சி வளர்ச்சி நிறுவனம், சென்னை -600024 |
| ஒளியச்சு | ஆதன் ஒளியச்சகம், சென்னை - 600024 |
| அச்சிட்டோர் | Aksharaprinters, Chennai - 600 094 |
| ISBN | 978-93-81101-23-0 |

## நுழையும் முன் . . . . .

இந்திய அரசின் மனித வள மேம்பாட்டுத் துறை அமைச்சகம் தேசிய கல்விக்கொள்கையை உருவாக்க சில விவாதத் தலைப்புக்களை 2015 சனவரி மாதம் வெளியிட்டது. இந்த விவாதத் தலைப்புக்கள் கல்வியின் அடிப்படைத் தன்மையையும் நோக்கத்தையும் மாற்ற முயலுவதை உணரமுடிந்தது. இந்திய அரசு கல்வியை ஒரு வணிகப் பொருளாக மாற்றக் கூடாது. ஒற்றைப் பண்பாட்டைக் கட்டமைக்கக் கல்வித்துறைப் பயன்படுத்தப் படக்கூடாது என்ற கருத்தை வெளிப்படுத்தித் தமிழ்நாட்டிலிருந்து பல நூறு கடிதங்கள் மத்திய அரசின் மனித வள மேம்பாட்டுத் துறைக்கு அனுப்பப்பட்டது. இந்நிலையில் நாடு முழுவதும் 2.75 இலட்சம் கருத்தறியும் கூட்டங்கள் நடத்தப்பட்டதாகவும் வலைத் தளம் வாயிலாக 29,000க்கும் மேற்பட்டோரிடமிருந்து கருத்துக்கள் பெறப்பட்டதாகவும் அதைத் தொகுத்து அறிக்கை தருவதற்கு ஒரு குழுவை அமைத்துள்ளதாகவும் மனிதவள மேம்பாட்டு அமைச்சகம் தெரிவித்தது.

ஐந்துபேர்களைக் கொண்ட அக்குழுவில் நால்வர் ஓய்வுபெற்ற ஆட்சிப் பணி அலுவர்கள். ஒருவர் மட்டுமே கல்வி மேலாண்மையோடு தொடர்புடையவர். இக் குழுவிற்கு முன்னாள் அமைச்சகச் செயலாளர் திரு. T. S. R. சுப்பிரமணியன் தலைமை வகித்தார். இத்தகையோர் அடங்கிய குழு தேசிய கல்விக் கொள்கையை வகுப்பதற்கான அறிக்கையை எவ்வாறு தரவியலும்? என்ற வினா எழுப்பப் பட்டது. சுப்பிரமணியன் குழு அறிக்கையை வாசிக்காமல், அரசு வெளியிட்டுள்ள ஆவணத்தில் கூறப்பட்டுள்ள கொள்கை முன் மொழிவிற்கான காரணம், நோக்கம், விளைவு எளிதில் புரிந்து கொள்ள இயலாது. எடுத்துக்காட்டாக ஆங்கிலத்தில் உள்ள ஆவணத்தின் பக்கம் 32 பத்தி எண் 6 யில் கூறப்பட்டுள்ள கொள்கை முன் மொழிவிற்கான காரணம் புரியாமல் அதன் விளைவு எத்தகையதாக இருக்கும் என்பதை உணர முடியாது. அதனால் சுப்பிரமணியன் குழு அறிக்கையை அரசு வெளியிட வேண்டும் என கோருகிறோம்.

மிகக் குறைந்த காலத்தில் இக்குழு அறிக்கையையும் அமைச்சகத்திடம் தந்தது. பெறப்பட்ட அறிக்கையை பொதுமக்கள் பார்வைக்கு வெளியிட அமைச்சகம் மறுத்துள்ளது. அதையும் மீறி அறிக்கை சிலருக்குக் கிடைத்தது. அதை வாசிக்கும்போது கல்விக்கு நிகழவுள்ள ஆபத்து முழுமையாக உணரப்பட்டது. இந்த அறிக்கையை பொதுப் பள்ளிக்கான மாநில மேடை மக்கள் முன் கொண்டுசென்றது. அலுவக முறையில் அரசு இதனை வெளியிடவேண்டும் என்ற கோரிக்கையும் முன்வைக்கப்பட்டது. இந்நிலையில் மனித வள மேம்பாட்டு அமைச்சகம் "தேசிய கல்விக் கொள்கை 2016 வரைவிற்கான சில உள்ளீடுகள் ( Some Inputs for Draft National Policy 2016) " என்ற தலைப்பில் ஓர் ஆவணத்தைத் தனது வலைத் தளத்தில் 2016 ஜூன் 30 அன்று வெளியிட்டு ஜூலை 31க்குள் பொதுமக்கள் கருத்துத் தெரிவிக்கலாம் என அறிவித்துள்ளது.

ஆங்கிலத்தில் மட்டுமே உள்ள இந்த ஆவணத்தை வாசித்து இந்திய மக்கள் எவ்வாறு கருத்துக்கூறவியலும்? மாநில அரசின் உரிமைகளைப் பறிப்பதோடு தமிழ் உள்ளிட்ட இந்திய மொழிகள் அழிவிற்கும் வழிவகுக்கும். கல்விக்கு நிகழவிருக்கும் ஆபத்தையும் வகுப்புவாத வித்தினை ஊன்றி சந்தைப் பொருளாகக் கல்வியை மாற்றுவதாக இக்கொள்கை முன்மொழிவுகள் அமைவதை இந்திய மக்கள் உணர்ந்து அதைத் தடுத்திடவேண்டும் என்னும் நோக்கில் இம்முன்மொழிவுகள் தமிழாக்கம் செய்யப்பட்டு வெளியிடப்படுகின்றன.

பொதுப் பள்ளிக்கான மாநில மேடையின் தலைவர் முனைவர் பி.இரத்தினசபாபதி அவர்கள் தமது 76ஆவது அகவையில் பல்வேறு பணிகளுக்கிடையில் ஒரு வார காலம் ஓய்வில்லாது ஆவணத்தை முழுமையாக வாசித்து உள்வாங்கி அதன் மையப்பகுதியான கொள்கை முன்மொழிவுகள் என்ற பகுதியை தமிழில் மொழிபெயர்த்துத் தந்துள்ளார். தமிழ்மக்கள் வாசித்துக் கருத்துக்கூற உதவிடும் வகையில் இப்பெரும் பணியினை ஆற்றியுள்ள முனைவர் பி.இரத்தினசபாபதி அவர்களுக்குத் தமிழ்கூறும் நல்லுலகம் என்றும் கடமைப்பட்டுள்ளது. பொதுப்பள்ளிக்கான மாநில மேடை தன் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறது.

இந்திய அரசு , இந்திய மொழிகள் அனைத்திலும் இந்த ஆவணத்தை வெளியிட வேண்டும் எனக் கோரும் அதே வேளையில் ஆபத்துக்களை இந்திய மக்கள் உணர்ந்து உடனடியாக மாற்றுக் கொள்கையினை அரசுக்குத் தெரிவிக்கவேண்டும் என்ற நோக்கில் தமிழகக் கல்வி ஆராய்ச்சி வளர்ச்சி நிறுவனத்தால் பொதுப்பள்ளிக்கான மாநில மேடையின் வாயிலாக இந்த ஆவணம் மக்கள் பதிப்பாக வெளியிடப்படுகிறது.

ஆசிரியர் , மாணவர், பெற்றோர், கல்வியியல் செயல்பாட்டு அமைப்பினர், அரசியல் கட்சியினர் என அனைவரும் இந்த ஆவணத்தை வாசித்து தகுந்த ஆலோசனையையும் வழிகாட்டல்களையும இந்திய அரசுக்கு வழங்கிடவேண்டுமென கோருகிறோம்.

இந்திய அரசமைப்புச் சட்டத்தின் பகுதி 4, அரசுக்கு வழிகாட்டும் நெறிமுறைகள் பிரிவு 41இல் கூறியவாறு அரசின் முழுப்பொறுப்பிலும் செலவிலும் பொதுக்கல்வி முறைமையில் இந்திய மக்கள் அனைவருக்கும் கல்வி வழங்கப்படுவதே இன்றைய கல்விச் சிக்கலுக்கான ஒரே தீர்வு, அனைவருக்கும் கல்வி தருவதற்குப் பொருளாதார நிலை வழிவகுக்கவில்லை என்று 1949 இல் முன்வைக்கப்பட்ட வாதம் 2016இலும் வலியுறுத்தப்படுமாயின், இந்தியா விடுதலை பெற்று 68 ஆண்டுகள் ஆகியும் இந்தியப் பொருளாதார நிலை உயரவே இல்லையா? என்னும் கேள்வி எழுகிறது. விழிப்போடிருக்கும் மக்களாலேயே ஜன நாயகத்தைக் காக்கமுடியும் .

புதிய தேசியக் கல்வி கொள்கை இன்னும் உருவாகவில்லை. அதற்கான வரைவு கூட எழுதப்படவில்லை. கல்விக் கொள்கை வரைவை தயார் செய்ய சில கொள்கை முன்மொழிவுகளை மட்டுமே அரசு வெளியிட்டுள்ளது.

இந்நிலையில் கல்விக் கொள்கையை வரையறுக்க கல்வியாளர்களை கொண்ட ஒரு குழுவை அரசு உருவாக்க வேண்டும் . அத்தகைய குழுவில் மாநிலங்களையும், சமூகத்தின் அனைத்துப் பிரிவு மக்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் அமையவேண்டும்.

குறிப்பாக, சமூகத்தின் பெரும்பான்மையாக உள்ள, சமூக ஒடுக்குமுறைக்கு உள்ளான பெண்கள், சிறுபான்மையினர், பட்டியல் இனத்தவர், பிற்படுத்த பட்டோர், மாற்றுத்திறனாளிகள் உள்ளிட்ட பிரிவுகளில் இருந்து சிறந்த கல்வியாளர்களை இக்குழுவில் இடம்பெற செய்யவேண்டும்.

அத்தகையகுழுதயாரிக்கும் வரைவுஅறிக்கைமக்கள்முன்வைக்கப்பட்டுமக்கள்கருத்தை கேட்டு அதன்அடிப்படையில் கல்விக்கொள்கைஉருவாக்கவேண்டும்.

இந்திய அரசமைப்பு சட்டத்தின் நோக்கமான கட்டணமில்லா கல்வியை அரசு தர வழி வகுக்கும் கொள்கையை கல்விக்குழு உருவாக்க வேண்டுமே தவிர உலக வர்த்தக அமைப்பு ஆணையை நடைமுறைப்படுத்தும் கொள்கையை வகுத்து தர கூடாது. ஆசிரியர், மாணவர், பெற்றோர்கூட்டியக்கம்அரசின்தவறானஅணுகுமுறையைமாற்றவும்அரசைதன்பொறுப்பில் அனைவருக்கும் கல்வி தர வைக்கவும் முடியும். மக்கள் சக்தியை மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டஅரசுக்குஉணர்த்துவதுநம்அனைவரின்கடமை.

கல்வியை வணிகப் பொருளாக்கி வாங்கும் சக்தி உள்ளவர்களுக்கு மட்டுமே கல்வி எனும் நிலையை உருவாக்க வழி வகுக்கும் இந்திய அரசின் மனித வள மேம்பாட்டு அமைச்சகத்தின் வரைவுதேசியகல்விகொள்கைக்கானமுன்மொழிவுகளைநிராகரிப்போம்!

ஆரம்பக் கல்வி முதல் பல்கலைக் கழகக் கல்வி வரை அனைவருக்கும் கட்டணமில்லா கல்வியை அரசே வழங்க களம் காண ஒன்றிணைவோம் ! வெற்றிபெறும்வரை போராடுவோம் !

## கல்வி உரிமையை வென்றிட ஒன்றிணைவோம்.

பு.பா.பிரின்ஸ் கஜேந்திரபாபு
பொதுச் செயலர், பொதுப்பள்ளிக்கான மாநிலமேடை
மின்அஞ்சல் : spcsstn@gmail.com வலைத்தளம் www.samacheerkalvi.in

## மொழிபெயர்ப்பாளர் உரை....

தேசியக் கல்விக் கொள்கை 2016 இன் அறிக்கை கடந்த 26-04-2016 அன்று வெளியிடவிருப்பதாக இதழ்களில் செய்தி வந்தது. ஆனால் அக்கல்விக் கொள்கையின் அறிக்கையினைத் தயாரித்த குழுவின் தலைவர் திரு T.S.R. சுப்பிரமணியன் அவர்கள் அதனை 30-04-2016 இல் நடுவண் அரசின் மாண்புமிகு மனிதவள மேம்பாட்டு அமைச்சர் அவர்களிடம் வழங்கியதாக அறியமுடிந்தது (இணைப்பு 1). 27-05-2016 நாளிட்ட இந்திய அரசின் அச்சகத் தகவல் நிறுவனம் (Press Information Bureau) தேசிய கல்விக்கொள்கை அறிக்கை மனிதவள மேம்பாட்டு அமைச்சகத்திற்கு அளிக்கப்பட்டதை உறுதிசெய்தது (இணைப்பு 2). எனினும் அவ்வறிக்கை அலுவலக முறையில் வெளியிடப்படவில்லை.


பொதுப்பள்ளிக்கான மாநில மேடை T.S.R. சுப்பிரமணியன் அவர்களின் அறிக்கையினை அலுவலக முறையில் வெளியிட வேண்டுமென வலியுறுத்த கடந்த 27-06-2016 அன்று இதழாளர்களின் கூட்டத்தைக் கூட்டிக் கோரிக்கை விடுத்தது. இக்கோரிக்கையினை இதழ்கள் பலவும் வெளியிட்டன. அவ்விதழ்களுக்கு பொதுப் பள்ளிக்கான மாநில மேடை சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். ஆங்கிலத்தில் அமைந்த 217 பக்கங்களைக் கொண்ட அவ்வறிக்கை முழுமையாக இந்நாள்வரை வெளியிடப்படவில்லை. எனினும் 43 பக்க அளவில் “Some Inputs for Draft National Educational Education Policy” என்னும் பெயரில் ஆங்கிலத்திலே வெளியிடப்பட்டது. அதில் 5 இயல்கள் உள்ளன. இயல் 1 முன்னுரை (Preamble) , இயல் 2 கல்விப் பிரிவில் முதன்மையான அறைகூவல்கள் (Key Challenges in Education Sector), இயல் 3 முன்னோக்கு, செயலாக்கம், இலக்குகளும், குறிக்கோள்களும் ( Vision, Mission, Goals and Objectives), இயல் 4 கொள்கைக் கட்டமைப்பு (Policy Framework) , இயல் 5 செயற்படுத்தலும் நெறிப்படுத்தலும் (Implementaion and Monitoring). இவற்றுள் இயல் 3 முழுமையாகவும் இயல் 4 இல் உள்ள கொள்கை முன்மொழிவுகளும் தமிழாக்கம் செய்யப்பட்டு நூல்வடிவில் தரப்படுகின்றன.

கல்விக் கொள்கையின் பிழிவாக அமைவது கொள்கை முன்மொழிவுகள். எனவே அவை மட்டும் காலவிரைவு கருதி தமிழாக்கம் செய்யப்பட்டுள்ளன. 21 தலைப்புகளில் 143 கொள்கை முன்மொழிகள் காணப்படுகின்றன. தமிழ்நாட்டின் கல்விச் சிந்தனையாளர்கள் இக்கொள்கை முன்மொழிவுகள் சமுதாயப் பின்னணி, வளர்ச்சி நோக்கில் தங்கள் கருத்துரைகளை வழங்குவதற்கு ஏதுவாக இம்மொழிபெயர்ப்புத் தரப்படுகிறது. இது நடுவண் அரசின் அலுவலக வெளியீடன்று. பொதுப்பள்ளி மாநிலமேடை

சார்பான தமிழகக் கல்வி ஆராய்ச்சி நிறுவனத்தால் வெளியிடப்படும் இந்நூல் இவ்விரு நிறுவனத்தின் கருத்துக்களையோ விமர்சனங்களையோ தருவதுமன்று. ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், கல்வி வளர்ச்சிச் சிந்தனையாளர்கள் என பலரிடமும் கருத்துரைகள் பெறும் நோக்கில் "Some Inputs for Draft National Educational Education Policy" என்பதலுள்ள இயல் 3, கொள்கை முன்மொழிவுகள் என்பனவற்றின் தமிழ் மொழிபெயர்ப்பாக வெளியிடப் படுகிறது. கருத்துரைகளை விரைவில் பொதுப்பள்ளிக்கான மாநில மேடை, 14 அ, சோலையப்பன் தெரு, சென்னை - 600017 என்னும் முகவரிக்கு அனுப்பி உதவிட வேண்டுகிறோம். கருத்துரைகள் spcsstn@gmail.com என்னும் மின் அஞ்சல் முகவரிக்கும் அனுப்பப் படலாம்.

இம்மொழி பெயர்ப்பு நூல் 14-07-2016 அன்று சென்னை , மெரினா வளாகத்தில் நடைபெறும் தேசியப் பேராயக் கருத்தரங்கில் (National Convention)வெளியிடப்படுகிறது.

இம்மொழிபெயர்ப்பு நூல் வெளிவருவதற்கு மிகவும் முனைப்புக் காட்டியவர் தமிழ்நாடு பொதுப் பள்ளிக்கான மாநில மேடையின் செயலர் **திரு பு.பா. பிரின்ஸ் கஜேந்திரபாபு.**அவர்கள் முனைப்பின்றி இந்நூல் வெளிவந்திருக்காது. கல்வியில் நாட்டமுடைய அனைவருக்கும் பயனுறுமாறு இந்நூல் வெளிவர உந்துதலாயிருந்த அவருக்கு என் மனமார்ந்த பாராட்டுதலையும் நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.



## ( இயல் 3) முன்னோக்கு, செயலாக்கம், இலக்கு, குறிக்கோள்கள்

### முன்னோக்கு (Vission)

அனைத்து நிலையிலும் தரமிக்கதும் வாழ்நாள் முழுமையும் கற்றல் வாய்ப்பினை வழங்குவதுமான மதிப்புமிக்க உயர்திறன் கொண்ட கல்வி அமைப்பினை உறுதிசெய்தல், விரைந்து மாறிக்கொண்டிருக்கும் உலகமயமாதல் சார்ந்து அறிவார்ந்த பொருளியல் சமுதாயத் தேவைக் கேற்ப இயக்கமுடைய வாழ்க்கையை நடத்துவதற்கும் தேச மேம்பாட்டுச் செயல்களில் ஈடுபடுதற்குமான அறிவு, திறன், மனப்பான்மை, விழுமங்கள் ஆகியனவற்றால் தம்மைத் தகுதிப் படுத்திக்கொள்ளும் மாணவர்களை உருவாக்கல் என்பனவற்றைத் தேசியக் கல்விக்கொள்கை 2016 முன்னோக்காகக் கொண்டுள்ளது.

### செயலாக்கம் ( Mission)

நிகர் வாய்ப்புடைய எல்லா நிலைகளிலும் தரமிக்க கல்வி வழங்கல், வாழ்நாள் முழுமையும் குழந்தைகள் (Children) , இளைய வயதினர் ( youths ) , வயதுவந்தோர் ( adults ) என யாவருக்கும் கற்கும் வாய்ப்புத் தருதல், மாந்தரின் தேசியத் திறனை முழுமையான அளவிற்கு உயர்த்துதல் என்பனவற்றை உறுதிப்படுத்துதல்.

இந்தியாவின் வளமார்ந்த மரபின் மேன்மை, புகழார்ந்த தொன்மை, உயர்வார்ந்த வாழ்க்கை நடைமுறைகள், பன்முகப்பட்ட பண்பாடு ஆகியன பற்றிக் குழந்தைகள், இளம் , வயதுவந்தோர் என யாவரிடமும் விழிப்புணர்வை உருவாக்குவதற்கு ஏதுவான பள்ளிக்கல்வி, உயர்கல்வி, வயதுவந்தோர் கல்வித் திட்டச் செயல்களை உறுதிப்படுத்தல்; பொறுப்புள்ள குடிமைப் பண்பு, அமைதி, சகிப்புத் தன்மை, மதச்சார்பின்மை, தேசிய ஒருமைப்பாடு, சமுதாய இணக்கம், எல்லாச் சமயங்களையும் பகிர்வுமனப் பான்மையொடு மதித்தல் ஆகிய விழுமங்களையும் பன்னாட்டுக் குடிமைப் பண்பையும் நிலையான மேம்பாடு தொடர்பான விழுமங்களையும் எல்லா மட்டத்திலும் கற்போர் தம்வயமாக்குதல்.

எழுச்சியுறும்உலகமயமாதலின்அறைகூவல்களைஎதிர்கொள்ளுவதற்கு ஏதுவாக ஆக்கத் திறன்மிக்க வாழ்க்கையை மேற்கொண்டு தேச மேம்பாட்டுச் செயல்களில் ஈடுபடுவதற்கு வழிகாட்ட வல்ல கல்வி ஏற்பாடு, கற்றல் பொருள்கள், கற்பித்தல் முறைகள், கற்றல் கணிப்பீடு, ஆசிரியர் தரமும் திறனும், நிறுவன வழிகாட்டலும் மேலாண்மையும் ஆகியன தொடர்பான சீர்திருத்தங்களில் கவனம் செலுத்திக் கல்வித் தரத்தை மேம்படுத்துதல்.

பொருளுணராக் கற்றலைப் போக்கக்கூடிய முறையான தொழில் நுட்பத் திறனைப் பெற்றுத் தொழில் வல்லுநராகத் திகழவும் ஆக்கமும் புதுமையும் கொண்டு பகுத்தாய்வுச் சிந்தனையோடு தொடர்புகொள்ளும் திறன், சிக்கலைத் தாமாகத் தீர்க்கும் ஆற்றல் பெற்றுத் தேசிய மேம்பாட்டிற்குப் பங்களிப்பைத் தருமாறு கற்பவர்களை உருவாக்குதல்.

## இலக்குகளும் குறிக்கோள்களும் (Goals and Objectives)

தரமும் பொருத்தமும் உடைய கல்வியை ஊட்டுதல், இந்திய கல்வி முறைமத்தின் நம்பகத்தன்மையினை உயர்த்துதல், பள்ளிக் கல்வியிலும் உயர்கல்விலும் கல்வி பெற்றோரின் வேலை வாய்ப்பினைப் பெருக்குதல், முன்குழந்தைப் பருவக் கல்வி முதல் தொழில் நுட்ப, தொழில் சார் கல்வியை உள்ளடக்கிய சார்புநிலை (மூன்றாம் நிலை) கல்வியோடு வாழ்நாள் முழுமையும் கல்வி பெறத்தக்க நிகர் வாய்ப்பினை உறுதிசெய்தல், எல்லாப் பிரவினருக்கும் கல்வியை வழங்குதல் ஆகியன முழுமையான இலக்காகும்.

## முன்னோக்கத்தையம் செயலாக்கத்தையும் நிறைவுசெய்யத் தக்கவாறான முதன்மையான கல்விக் குறிக்கோள்கள்

தொடக்கக் கல்வியை பெறுவதற்கான தயார் நிலையை 4 முதல் 5 வயதினர் பெறத்தக்கவாறு முன்பள்ளிக் கல்வியை விரிவுபடுத்தல் - குறிப்பாக வாய்ப்பு வசதி குறைந்த மக்களின் குழந்தைகளுக்கு வழங்கல்.

தொடக்கக் கல்வியையும், இடைநிலைக் கல்வியையும் அனைவரும் பெறுவதோடு இடைநிலைக் கல்வி பெற்றோர் அனைவரும் மேனிலைக் கல்வியும், மேனிலைக் கல்வி பெற்றோர் அனைவரும் உயர்கல்வியையும் பெறுவதற்கான நிகர்வாய்ப்புப் பெறுவதை உறுதிசெய்வதோடு சேர்க்கப்பட்ட எல்லா மாணவர்களும் எதிர்பார்க்கப்படும் கற்றல் வெளிப்பாடுகளோடு கற்றலில் வெற்றிபெறுதல்.

குழந்தைகள், இளையோர், சிறப்புத் தேவையுடைய வாய்ப்பற்ற மக்கள் குழுக்களுக்குச் சிறப்புக்கவனம் செலுத்தி – குறிப்பாக குழந்தைகள், குமரப்பருவத்தினர், பல்வேறு இயலாமைகளைக் கொண்ட சிறப்புத் தேவையுடைய இளைஞர்கள் என அனைவருக்கும் கல்வித் திட்டச்செயல்களின் (Programmes) அனைத்துப் பயன்களும் கிடைக்கச்செய்தல். மேலும், சேர்க்கப்பட்ட மாணவர்கள் அனைவரும் எதிர்பார்க்கப்படும் தேர்ச்சி அடைவதை உறுதிசெயதல்.

சமுதாய, வட்டார, பாலின இடைவெளிகள் கல்வியில் நீக்கப்படுவதை உறுதிப்படுத்தி பாலின நிகர்மையினையும் சிறுமியர், பெண்கள் மேன்மையைக் கல்வி அமைப்பின் அனைத்து நிலையிலும் உயர்த்துதல்.

வேலைத் திற மேம்பாட்டிற்கான வாய்ப்பினைப் பெருக்குதலோடு இளைஞர்களும்வயதுவந்தோரும் வேலைவாய்ப்புக்கும் தொழில்முனைவுக்கும் தேவைப்படுமாறு வாழ்கைப்பணி சார்ந்த நுட்பத்தையும்,தொழில்திறனையும் பெறுவதைஉறுதிப்படுத்துதல்.

பொருளியல் முறைசாராஅமைப்புக்களில் வேலைசெய்வோர் உள்ளிட்ட, நிறுவனம்சார்ந்தகல்விஅமைப்பிற்குவெளியிலிருக்கும் 15முதல்24 வயது வரையிலுள்ள இளைஞர்கள், 15 வயதுக்கு மேற்பட்ட வயதுவந்தோர் ஆகியோர் வேலைவாய்ப்புத்திறன்பெறும்வாய்ப்பளித்தல்.

சார்புக் கல்விக்கு (T e r t i a r y) நிகர் வாய்ப்புக் கிடைப்பதை உறுதிசெய்வதற்காகப் பணிக்கல்வி உள்ளிட்ட உயர்கல்வி முறைமத்தை சீரமைத்தல்,உயர்கல்வியை அணுகுவதற்குக் குழுஅடிப்படையிலான நிகர்மை யின்மையைக் குறைத்தல், கற்பித்தலையும்ஆராய்ச்சியையும்மேம்படுத்துதல், உயர்கல்வி நிறுவனங்களிலெல்லாம் புதுமைகளை ஊக்குவித்து புது அறிவுகளை வெளிப்படுத்துதல்,சேர்க்கப்பட்டஅனைவரும்குறித்தகற்றலவெளிப்பாடுகளை யும்வேலைக்குஅமரும்திறனையும்பெறுதல்.

கற்பித்தல் கற்றல் செயல் போக்கின் தரத்தினை உயர்த்திக் கல்வியை அணுகும் சூழலை மேம்படுத்தித் தகவல் தொடர்பு நுட்பம் கல்வியில் ஒருங்கிணைக்கப்படுவதை உறுதிசெய்தல்.

ஆசிரியர் மேம்பாடு , மேலாண்மை , தொடர்ச்சியான பணிநிலை முன்னேற்றம் ஆகியன சீரமைக்கப்படுறது. தகுதியும் வரையறுக்கப்பட்ட செயல் திறனும் உடைய ஆசிரியர்கள் உரிய அளவில் கிடைப்பதையும் உரிய அளவிலான தொழில் தரத்தைக் கொண்டுள்ளதையும் உறுதிசெய்தல்.

வயதுவந்தோர் எழுத்தறிவுத் திட்டச் செயல்களால் வரையறுக்கப் பட்ட எழுத்தறிவினையும் எண்ணறிவினையும் எல்லா இளைஞர்களும் வயதுவந்தோரில் 90 விழுக்காட்டினரும் பெறுவதை உறுதிசெய்தல்.

பதிலளிப்பு, பங்கேற்பு, பொறுப்பு ஆகியன கொண்ட கல்வியியல் திட்டம், ஆளுகை, மேலாண்மை முதலியனவற்றை உடைய அமைப்பினை நிறுவனப் படுத்துதல்; தேசிய, துணைத் தேசிய, உள்ளூர் மட்டங்களில் கல்விப் பிரிவிற்காகத் திட்டமிடுதல் மேம்பட்டிருப்பதையும் எழுச்சிபெறும் கல்வியியல் முதன்மைகளுக்கும் கல்விப் பிரிவுகளின் விரிவாக்கத் தேவைகளுக்கும் ஈடுகொடுத்தலை உறுதிசெய்தல்.

பணித்திறத்தையும் நிறுவன தலைமைத்துவத் திறத்தையும் விரிவுபடுத்தித் தேசிய, துணை தேசிய, நிறுவன மட்டங்களில் கல்விப் பிரிவின் தலைமைத்துவத்தைஎழுச்சிபெறும் கல்வியியல் முதன்மைகளுக்கும் கல்விப் பிரிவுகளின் விரிவாக்கத் தேவைகளுக்கும் ஏற்ப மேம்படுத்துவதை உறுதிசெய்தல்.

கல்வியியல் மேம்பாட்டு திட்டச்செயல்களுக்கு உயர்த்தப்பட்ட, நன்றாகத் திட்டமிடப்பட்ட நிதி ஒதுக்கத்தை உறுதிசெய்தல்.

ஒவ்வொரு பிரிவிற்கும் வாழ்நாள் முழுமைக்கும் உறுதிதரத்தக்கவாறு எதிர்காலக் கல்வித் திட்டம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இக்கல்விக் கொள்கை கல்வியின் நோக்கத்தை கற்போர் விருப்பிற்கேற்பவும் இயலுகின்ற தன்மைக்கு ஏற்பவும் உலகப் போக்கிற்கேற்ப வேலைகளை மேற்கொள்ளுவதற்காகவும் விரிவுபடுத்தி எளிதாக்குகிறது. நிறுவனம் சார்ந்தோ, நிறுவனம் சாராத முறையிலோ கற்றோரின் கற்றலுக்கும் கற்றல் வெளிப்பாட்டிற்கும் உரிய ஏற்பளித்து சான்றுதருவதை உறுதிசெய்கிறது.

## ( இயல் 4) கொள்கை முன்மொழிவுகள்

### 4.1 முன்பள்ளிக் கல்வி ( Pre-School Education)

1. பெண்கள் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகத்தோடு இணைந்து 4 முதல் 5 வயது வரையிலான குழந்தைகளுக்கான முன்பள்ளிக் கல்வி திட்டச் செயலகளுக்காக (Programmes) முன்னுரிமை வழங்கல்.

2. குழந்தைகள் மேம்பாட்டிற்கான ஒருங்கிணைந்த பணித்துறையின் கீழ் இயங்கும் தற்போதைய அங்கன்வாடிகளுக்கு முன்பள்ளிக் கல்வி வழங்குவதற்கான வசதிகள் தரப்படவில்லை. இப்பள்ளிகளை வலுப்படுத்துவதற்கு மாநிலங்களோடு ஆலோசனை நடத்தி நடவடிக்கைகள் எடுக்கப்படும். முன்பள்ளிக் கல்வியின் கல்வி ஏற்பாட்டைச் (Curriculum) சீரமைக்கவும் கற்றல் பொருள்களை மேம்படுத்தவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல்; ஓராண்டிற்குள் அங்கன்வாடி ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளித்தல்.

3. அங்கன்வாடி ஆசிரியர்களுக்கான பணிமுன் பயிற்சியை வழங்குவதற்கும் ஆசிரியர்களின் பணிநிலைகளை முறைப்படுத்துவதற்குமான ஏற்பாடுகளை மாநில அரசுகள் மேற்கொள்ளும். அங்கன்வாடிகளிலிருந்து முன்பள்ளிக் கல்விக்குச் செல்லும் மாற்றம் மெதுவாகவும் இடைவெளியற்றும் நிகழும். இதனைச் செயல்படுத்த மாநில அரசுகள் கால வரையறை செய்து பணிகளை நிறைவேற்றும்.

4. காலப்போக்கில் எல்லாத் தொடக்கப் பள்ளிகளும் முன்பள்ளிக் கல்வி வழங்கும் நிறுவனமாகவும் மாறும். இதனைச் செயற் படுத்தும்போது முன்பள்ளிக் கல்விக் கூடங்கள் தொடக்கப் பள்ளி வளாகத்திலோ,அதற்கு அண்மையிலுள்ள இடத்திலோ அமைக்கப்படும்.

5. தனியாரால் நடத்தப்படும் முன்பள்ளிக் கல்வி நிறுவனங்களுக்குரிய விதிமுறைகளும் இயக்கமுறைகளும் வகுக்கப்படும்.

## 4.2 குழந்தைகள் குமரப் பருவத்தினர் கல்வி உரிமைப் பாதுகாப்பு (Production of Rights of the child & Adolescent Education)

1. பள்ளிக்கூடங்களில் குழந்தைகளுக்கான கவனமும் பாதுகாப்பும் பற்றிய விதிமுறைகள் வகுக்கப்பட்டு அவை பள்ளிகளுக்கு ஏற்பு வழங்குவதற்குரிய நிபந்தனைகளாக்கப்படும்.

2. ஆசிரியர்கல்வி திட்டச் செயல்களிலும் ஆசிரியர்களுக்கான புத்தாக்கப் பயிற்சி (Refresher course) களிலும் பயிற்சிபெறுவோருக்கு கட்டகங்கள் (modules) வழங்கப்பட்டு அவற்றில் குழந்தைகளின் கல்வி உரிமை தொடர்பான சட்டங்கள் , விதிகள், ஒழுங்குமுறைகள் பற்றியும் அவற்றை மீறினால் ஏற்படும் விளைவுகள் பற்றியும் ஆசிரியர்களுக்கும் நிறுவனத் தலைமைக்கும் அறிவுறுத்தப்படும்.

3. படிப்படியாக பள்ளிக் கல்விஏற்பாட்டில் சிறார் கல்வி, தேசிய மக்கள் தொகைக் கல்வித் திட்டச் செயல்கள் ஒருங்கிணைக்கப்படும்.

4. இடைநிலை ஆசிரியர்கல்வியிலும் அவர்களுக்கான பணியிடைப் பயிற்சிகளிலும் குமரப் பருவத்தினர் கல்வித் திட்டச்செயல்கள் இணைக்கப்படும்.

5. மாணவர், ஆசிரியர், பெற்றோர்கள் ஆகியோர் வலைத் தள வாயிலாகக் குழந்தை உரிமைகள் பற்றிக் கற்பதற்குத் தாமேகற்றல் தன்மையிலான திட்டச் செயல்கள் உருவாக்கப்படும்.

6. குமரப்பருவத்தினர் எதிர்ப்படும் சிக்கல்கள் பற்றிப் பெற்றோர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் தெரிவிப்பதற்கு ஏற்றவாறு அவர்களை ஆற்றுப்படுத்துவதற்குப் பயிற்சிபெற்ற ஆற்றுநர்களைப் பள்ளிக் கூடங்கள் பணியமர்த்தும்.

## 4.3 பள்ளிக் கல்வியில் கற்றல் விளைவுகள் ( Learning Outcomes in School Education)

1. குழந்தைக் கல்வி உரிமைச் சட்டத்தில் குறிக்கப்பட்ட உள்கட்டமைப்பு விதிகள் தவிரவும் கற்றல் விளைவுகள் தொடர்பான விதிமுறைகள் அரசுப் பள்ளிக்கூடங்களுக்காகவும், தனியார் பள்ளிக்கூடங்களுக்காகவும் வகுக்கப்படும்.

2. குழந்தைக் கல்வி உரிமைச் சட்டத்தில் பரிந்துரைக்கப்பட்ட அளவுருக்களுக்கு (Parameters) உட்பட்டு, பள்ளிக் கூடங்கள் அமைந்துள்ள ஊர்ச் சூழலுக்கேற்ப உட்கட்டமைப்பு விதிகளை மாநிலங்கள் வகுத்துக்கொள்ளும். தேவையெனின் உரிய சட்டத்திருத்தம் மேற்கொண்டு மாற்றுப் பள்ளிகளைஅமைத்துப்பின்தங்கிய, இடம்பெயர்ந்த வகையினருக்குக் கல்வி வழங்கும்.

3. தற்போதைய நடைமுறையிலிருக்கும் இடைநிறுத்தம் இல்லாக் கொள்கை (No-detention) மாணவர்களின் படிப்பு செயல்திறத்தைப் பெரிதும் பாதிப்பதால் அது திருத்தப்படும். இடைநிறுத்தம் இல்லாக் கொள்கை ஐந்தாம் வகுப்புவரை பின்பற்றப்படும். உயர்தொடக்க வகுப்புகளில் இடைநிறுத்தம் பின்பற்றப்படும். தொடர் முழுமை மதிப்பீட்டின் வாயிலாகப் படிப்பில் பின்தங்கிய மாணவர்கள் கண்டறியப்பட்டு அவர்களுக்குக் குறைதீர் கற்பிப்பு வழங்கப்படும்.

4. பள்ளிகளில் தரத்தை மேம்படுத்த விளைபயன்மிக்க (effective) நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்; மின்னணு வளங்கள் போன்று பல வகைகளிலும் படிப்பதற்கான வசதிகள் செய்துதரப்படும்.

## 4.4 பள்ளிக் கல்வி (School Education)

1. குறைந்த மாணவர் சேர்க்கையும் உள்கட்டமைப்பு வசதியற்றுக் காணப்படுகின்ற பள்ளிகளை அடையாளப்படுத்துவதற்கு மாநிலங்கள் உரிய செயல்பாடுகளை மேற்கொள்ளும். மனித வளம், பொருள் , உள் கட்டமைப்புச் செலவுகள் ஆகியனவற்றின் சிக்கனப் பயன்பாட்டைக் கருதி இப்பள்ளிகள் ஒருங்கிணைந்த பள்ளிகளாக்கப்படும். பள்ளிகள் இணைக்கப்படும்போது அவை ஒரே வளாகத்தில் அமைக்கப் படவேண்டும். மாநிலங்களோடு கலந்தாலோசித்துக் குழந்தைகளின் கல்வி உரிமை பாதிக்கப்படாத வகையில் இணைப்புக்களுக்கான விதிமுறைகள் வகுக்கப்படும். இத்தகைய இணைப்பு ஒரு வகுப்பிற்கு ஒர் ஆசிரியர் என்னும் நிலையினை உருவாக்கும்.

2. மத, மொழிச் சிறுபான்மை நிறுவனங்களுக்குக் கல்வி உரிமைச் சட்டத்தின் பிரிவு 12 (1) ( c ) கீழ்க் குறிக்கப்பட்ட எதிர்கோள்கள் (Issues) பொருளாதாரத்தில் பின்தங்கிய பிரிவினருக்கான தேசிய பொறுப்பைக் கருதி மீண்டும் சரிப்படுத்தப்படும்.

3. பள்ளிக் கல்வி நிறைவு பெறத்தக்க வகையில் கல்வி உரிமைச் சட்டத்தை நீட்டிப்பதற்கு அரசு முயலும்.

4. கல்வியின் எல்லா நிலைகளிலும் வசதிகள் வழங்குதல், கற்றல் வெளிப்பாடுகள் ஆகியனவற்றில் குறைவற்ற தரம் (Minimum standard) நிர்ணயிக்கப்படும்.

5. கேந்திர வித்யாலயாக்கள், நேரு நவோதய வித்யாலயாக்கள் மேலும் விரிவுபடுத்தப்படும். கஸ்தூரிபாய் காந்தி பலிகா வித்யாலயாக்கள் மேலும் விரிவாக்கப்படுவதோடு அவை எங்கெங்கு இயலுமோ அங்கெல்லாம் பள்ளிக்கல்வி நிலைக்கு உயர்த்தப்படும். கல்வியின் பின்தங்கிய பகுதிகளுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டு இம்முறை மேற்கொள்ளப்படும். நேரு நவோதய வித்யாலயாக்களின் சிறந்த இயக்கத்திற்கான காரணங்கள் ஆராயப்பட்டு அந்நிறுவனங்களின் எண்ணிக்கை மேலும் உயர்த்தப்படும்.

6. படிக்கவியலாது இடை நின்று வேலை செய்யும் குழந்தைகள் தங்கள் கல்வியை நிறுவனம் சார்ந்து பெறவியலாத நிலையில் அவர்களுக்கென திறந்த நிலைக் கல்வி வசதிகள் செய்யப்படும்.

7. தங்கள் நாட்டம், விருப்பத்திற்கேற்றவாறு மாணவர்கள் படிப்பை மேற்கொள்வதில் இடர்ப்படுகின்றனர். ஆதலால் அவர்களின் உள்ளார்ந்த ஆற்றல் வெளிப்படாத நிலையில் குறைவான தேர்ச்சியால் ஏமாற்றத்திற்கும் மன அழுத்தத்திற்கும் உள்ளாகின்றனர். மாணவர்களின் படிப்பு நாட்டத்திற்கேற்ப அவர்களை வழிப்படுத்துவதற்கு ஆற்றுப்படுத்துபவர்கள் பணியமர்த்தப்படுவர். அவர்களுடைய சிறப்புத் தேவைகள் அடையாளங்காணப்படும். படிப்பில் பின் தங்கியவர்களுக் கேற்ற தொழில் சார்ந்த படிப்புக்களும் உடல்திறன் சார்ந்த கல்வியும் தரப்பட்டு உயர் மேனிலை வகுப்பு முடித்த நிலையில் அவர்களுக்கு உரிய பணிகளை ஏற்க வழிகாட்டப்படும்.

## 4.5 கல்வி ஏற்பாட்டைப் புதுப்பித்தலும் தேர்வுச் சீர்திருத்தங்களும் (Curriculum Renewal and Examination Reforms)

1. சமுதாய இணக்கம், சமயப் பொறுமை, தேசிய ஒருமைப்பாடு ஆகியனவற்றிற் கேற்ப எழுகின்ற அவாக்களை நிறைவு செய்யுமாறு கல்வி ஏற்பாட்டில் சீரமைப்புக்கள் மேற்கொள்ளப்படும். முன்னேறி வரும் நுட்பச் சூழலுக்கேற்ப மாணவர்களின் முழுமையான மேம் பாட்டினைக் கருதியவாறு வெளிப்பாடுகள் (o u t c o m e s ) அடிப்படையில் கல்விஏற்பாடு அமையவேண்டும். நாட்டிலும் உலகத்திலும் பொறுப்புள்ள குடிமக்களாக உருவாகிடத் தக்கவாறு மாணவர்களுக்கு அடிப்படைக் கடமைகளையும் உரிமைகளையும் கற்பிக்கவேண்டும்.

2. பள்ளிக்கல்வியில் சீரழிந்துவரும் தரம் தொடர்பான எதிர்கோள்களைக் கவனிப்பதற்கு ஏற்றவாறு தேசிய கல்வி ஆராய்ச்சி, பயிற்சி மன்றம் (NCERT) மறு கவனிப்புப் பெறும். பொருள்புரியா மனப்பாடக்கல்வியினைத் தவிர்த்து உசாவல் திறனை ஊக்குவிக்கின்ற திறன் வளருவதற்கு வழிகாட்டத்தக்கவாறு கல்விஏற்பாடும் கற்பித்தல் முறைகளும் காலந்தொறும் சீரமைக்கப்படும்.

3. அறிவியல், கணிதம், ஆங்கிலம் ஆகிய பாடங்களுக்குத் தேசிய அளவிலான பொதுவான கல்வி ஏற்பாடு (பாடத்திட்டம்) வடிவமைக்கப்படும். பிற பாடங்களான சமூக அறிவியல் முதலியனவற்றின் கல்விஏற்பாட்டின் ஒரு பகுதி பொதுவானதாகவும் பிற மாநிலங்களின் விருப்பிற்கு ஏற்பவும் அமையும்.

4. கணினி அறிவு ஐந்தாம் வகுப்பிலிருந்து கல்விஏற்பாட்டில் அறிமுகப்படுத்தப்படும். எனினும் தகவல் தொழில் நுட்பம் ஒரு பாடமாக ஆறாவது வகுப்பிலிருந்து கற்பிக்கப்படும். தகவல் தொழில் நுட்பக் கல்வி

எல்லா நிலைகளிலும் பயன்பாட்டு அடிப்படையில் அமையுமாறு மாற்றியமைக்கப்படும்.

5. அறிவியல் பொருண்மைகள் (Concepts) மாணவர்களால் செய்துகாட்டல் முறையாலும் செய்முறையாலும் நன்றாக விளங்கிக் கொள்ளப்படுவதாக அறியப்படுகிறது. எனவே அறிவியல் பாடங்களிலுள்ள செய்முறைக் கூறுகள் ஆறாம் வகுப்பிலிருந்து படிப்படியாக அறிமுகப்படுத்தப்படும்.

6. பாலினம் (Sex) , சமுதாயம், பண்பாடு, வட்டார ஏற்றத் தாழ்வுகள் ஆகியன தொடர்பான எதிர்கோள்கள் (issues) “பன்முகத்தன்மையில் ஒற்றுமை” என்னும் கருத்தினை வலியுறுத்துமாறு முறைப்படக் கல்விஏற்பாட்டிலும் அதனைத் வழங்கும் முறையிலும் கவனிக்கப்படும். சமுதாய ஏற்றத்தாழ்வுகளை தவிர்க்கச் சமூக நீதி, சட்ட நடவடிக்கைகள் ஆகியன சார்ந்த எதிர்கோள்களைக் கல்வி ஏற்பாடு கொண்டிருக்கும். கல்வி எற்பாட்டாலும் பாடநூற்கள் தயாரிக்கின்ற முகமைகளாலும் (Agencies) பாலினம், இயலாமை, ஜாதி, சமயம் முதலியனவற்றை அடிப்படையாக்கொண்ட ஏற்றத் தாழ்வுகள் இல்லாத நல்லிணக்கம் ஆகியன ஊக்குவிக்கப்படுவதைப் பாடநூல்கள் உறுதிப்படுத்தும். குடிமைக் கல்வி, அமைதிக் கல்வி, நற்குண உருவாக்கம், சட்டம், அரசமைப்புசார் அறிவு, நிதிசார்ந்த அறிவு, சுற்றுச் சூழலைப் பேணுதல் முதலியனவும் இவைபோன்ற பொதுநிலைக் கருத்துக்களும் எல்லாப் பாடங்கள் வாயிலாக ஊக்குவிக்கப்படும்.

7. பாட நூலிலுள்ள தகவலை மட்டும் மீண்டுரைக்குமாறில்லாமல், பரந்துபட்ட விழிப்புணர்வு, புரிதல், பொருளுணர்தல், சிக்கல் தீர்க்கும் உயர்நிலைத் திறன்கள் ஆகினவற்றைத் தேர்ந்தறியுமாறு தேர்வுகள் வடிவமைக்கப்படும். தொடர் கணிப்பீடு (Continuous Assessment) , தரமான வினாத்தாள் தயாரிப்பு, மதிப்பீட்டில் வெளிப்படைத் தன்மை ஆகியன இவ்வகையில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளில் சிலவாகும். தேர்வில் நெகிழ்ச்சித் தன்மையினை ஏற்படுத்துவதற்கும் ஆண்டு இறுதித்தேர்வால் ஏற்படும் மன அழுத்தத்தினைக் குறைப்பதற்கும் தேவைப்பட்ட நேரத்தில் வாரியத் தேர்வுகளை நடத்தும் முறையை அறிமுகப்படுத்த அரசு முயலும்.

**8. அறிவியல், கணிதம் , ஆங்கிலம் ஆகிய பாடங்களில் மாணவர்களின் குறைந்த செயல்திறனால் தேறாதோர் அளவு பத்தாம் வகுப்புத் தேர்வில் மிகவும் பாதிக்கப்படுகிறது. இத்தகைய தேர்ச்சிக் குறைவினைத் தவிர்க்க இப்பாடங்கள் ஒவ்வொன்றும் பகுதி A. பகுதி B என இரண்டாக்கப்பட்டு பகுதி A, உயர் மட்டமாகவும் பகுதி B தாழ் நிலையினதாகவும் வைக்கப்படும். அறிவியல், கணிதம், ஆங்கிலம் ஆகிய பாடங்கள் முன்தகுதியாகக் கருதப்படாத படிப்பினைத் தொடர்பவர்களோ, பத்தாம் வகுப்பிற்குப் பின்னர் தொழிற்கல்வியைத் தொடரவிரும்புவோரோ பகுதி Bயினை தேர்ந்தெடுப்பர்.**

9. தற்போது மத்திய, மாநில தேர்வு வாரியங்கள் பத்தாம் வகுப்பு, பன்னிரண்டாம் வகுப்புத் தேர்வுகளை நடத்துகின்றன. எந்த வாரியத்தின்

பாடத்திட்டத்திற்கு இணங்க பத்தாம் வகுப்புத் தேர்வு நடத்தப்படுகிறதோ அந்த வாரியம் நடத்தும் தேர்வினை மாணவர்கள் எழுதவேண்டுவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. பத்தாம் வகுப்பு வாரியத் தேர்வில் அவ்வகுப்பிற்கான பாடத்திட்ட முழுப்பகுதியும் வாரியத்தேர்வில் இடம்பெறும்
.

10. கற்றலில் பல நிலையிலும் வெவ்வேறு வாரியங்கள் நடத்தும் தேர்வுகளின் தரத்தில் மாறுபாடுகள் காணப்படுகின்றன. மேலும் வாரியங்கள் நடத்தும் தேர்வில் தேர்ச்சி அளவினை உயர்த்திக் காட்டுவதற்காகக் கருணை மதிப்பெண்கள் வழங்குகின்றதெனப் புகார்கள் பெறப்பட்டுள்ளன. இம்முறை தவிர்க்கப்படவேண்டுவதோடல்லாமல் பல்வேறு வாரியங்கள் நடத்தும் தேர்வுகள் ஒன்றுக்கொன்று ஒப்புநோக்கத் தக்கனவாக இருத்தல் வேண்டும். வாரியத் தேர்வுகளில் மட்டுமல்லாது ஒவ்வோர் ஆண்டின் தேர்ச்சியிலும் ஒப்புமையிருத்தல் வேண்டும். இதற்காக ஏதேனும் முறையொன்று பின்பற்றப்படவேண்டும். ஸ்கேலிங் எனப்படும் குறியீடுகளை ஒதுக்கும் முறை பின்பற்றப்படுகிறது. வேறு சில மாற்று முறைகளையும் கைக்கொள்ளவேண்டும். 10, 12 ஆம் வகுப்பு இறுதியில் மத்திய நிலையில் பொதுதேர்வு நடத்துதல்; அல்லது மதிப்பெண்களை விழுக்காட்டு அளவில் தருதல் . இவை போன்ற முறை ஏதேனும் வல்லுநர்களால் முடிவுசெய்யப்பட்டு மாணவர்களின் தேர்ச்சியின் அளவு ஒப்பிடப்படும்.

11. ஒரு நிறுவனத்திலிருந்து பிறிதொரு நிறுவனத்திற்கு மாணவர்கள் இடர்ப்பாடின்றிச் செல்வதை ஊக்குவிக்க இடம்பெயர்வுச் சான்றிதழ், பள்ளியிறுதிச் சான்றிதழ் போன்றனவற்றை வழங்கும் செயலொழுங்கு (Procedures)களில் சீரமைப்பு மேற்கொள்ளப்படும்.

## 4.6 உள்ளடக்கிய கல்வியும் மாணவர் உடன்பாடும் (Inclusive Education and Student Support)

1 . வேற்றுமையினை ஏற்படுத்துவனவாக அமையும் பாலினம், சமுதாயம், பண்பாடு, வட்டார ஏற்றத் தாழ்வுகள் முதலியன கல்வி ஏற்பாட்டில் முறையாகக் கவனிக்கப்பட்டு அது கற்பித்தலில் இடம்பெறும். சமுதாய வேற்றுமைகளைத் தவிர்ப்பதற்குச் சமுதாய நீதி, நல்லிணக்கம், சட்ட நடவடிக்கைகள் ஆகியன சார்ந்த எதிர்கோள்கள் உள்ளடக்கப்படும்.

2. தொழிற்கண்ணியம் (dignity of labour) பற்றி ஆக்க மனப்பான்மை யினை உருவாக்கவும் தொழில் ஆற்றலை மேம்படுத்தவும் தொழில் சார்ந்த முன்செயல்பாடுகள் கல்வி ஏற்பாட்டின் தொடக்க நிலையிலேயே புகுத்தப்படும்.

3. தகுதி, நிகர்வாய்ப்பு என்பனவற்றை ஊக்குவிக்கும் நோக்கில், கற்பித்தல் கட்டணம், கற்றல் பொருட் செலவு, அன்றாட வாழ்க்கைச் செலவு ஆகியனவற்றை எதிர்கொள்ளுவதற்கு ஏறத்தாழ 10 இலட்சம் மாணவர்களுக்காக நிரந்தரமான படிப்புதவி நிதி உருவாக்கப்படும்.

பொருளாதார நிலையில் பின்தங்கிய பிரிவிலுள்ள மாணவர்களுக்கு இந்நிதியிலிருந்து உதவித்தொகை வழங்கப்படும். மிகு திறமைக்கான உதவித்தொகை வழங்கும் திட்டத்தின் கீழ் போற்றத் தக்கவாறு படிப்பில் மேலோங்கியிருக்கும் மாணவர்களுக்கென 10 ஆம் வகுப்பு முடிவில் தேசிய அளவில் உதவித்தொகை வழங்குவதற்கான தேர்வு அறிமுகப்படுத்தப்படும்.

4. ஒற்றுமை, தொடர்பு ஆகியனவற்றை உறுதிப்படுத்தி அறிவுரை பெறுவதற்காக ஆசிரமங்களோடு அருகில் உள்ள இடைநிலைப் பள்ளிகள், மேனிலைப் பள்ளிகள், கேந்திரவித்யாலாயாக்கள், நவோதய வித்யாலாயக்கள் ஆகியனவற்றை இணைக்கும் வழிமுறைகள் காணப்படும்.

5. ஊர்ப்புற மாணவர்களின் தொழில் திறமைகள் மிகுந்த கவனத்திற்குரியன. முறையான பள்ளிக்கூட நேரத்திற்குப் பின்னர் தொழில் அடிப்படைப் படிப்புகள் தேசிய தொழில் வளர்ச்சி மேம்பாட்டு வாரியத்தின் உதவியோடு ஊர்ப்புற மாணவர்களுக்கு வழங்கப்படும்.

6. பழங்குடி மக்களின் குழந்தைகள் வட்டார மொழியில் கற்பதற்கு இடர்ப்படுவதாக அறியப்படுகிறது. இத்தடையினைப் போக்க தேவைக்கு ஏற்ப பன்மொழிகளில் கற்பித்தல் அறிமுகப்படுத்தப்படும்.

7. சமுதாயப் புறக்கணிப்பு, வீட்டின் உதவியின்மை, போதுமானதும் பொருத்தமானதுமான வசதியின்மை, குறிப்பாக சிறிய நகரங்கள், ஊர்ப்புறங்களிலுள்ள பள்ளிக்கூடங்களில் துணைக்கருவிகள் இல்லாமை முதலியனவற்றை எதிர்கொள்ளும் மாற்றுத் திறன் குழந்தைகளுக்கும் கற்றலில் இடர்ப்படுகின்ற குழந்தைகளுக்குமான கல்வித் தேவைகள் கவனிக்கப்படும்.

8. சிறப்புத் தேவைகளுக்குரிய குழந்தைகளுக்காக மேற்கொள்ளப்படும் தற்போதைய மத்தியஅரசின் திட்டங்கள் தொடர்ந்து செயல்படுத்தப் படுவதோடு அவற்றிற்கான நிதிகள் மேலும் உயர்த்தப்படும். மாநில, மாவட்ட அளவுகளில் இவற்றிற்குரிய திட்டங்கள் மேலும் கவனிக் கப்பட்டுத் தேவைகள் நிறைவுசெய்யுமாறு அவை செயற்படுத்தப் படும்.

9. குழந்தை மருத்துவ உளவியலாளர்களைக் கொண்ட பகுதிநேரத் துணைக்குழு உள்ளூர் மட்டத்தில் அமைக்கப்படும். ஆதலால் பள்ளிக்கூடமோ, மாவட்டக் கல்வி அலுவலரோ, வெளிப்புற உதவியையோ அறிவரையையோ தேவைப்படின் பெறவியலும். அத் துணைக்குழு, உணர்வார்ந்த நிலையில் குழந்தைகளைக் கையாளுவதற்குரிய பயிற்சிகளை ஆசிரியர்களுக்கு வழங்குவற்கு அறிவுறுத்தவியலும்.

10. கற்றல் குறைபாடுடைய குழந்தைகளின் சிக்கல்களைக் கவனிப்பதற்கு மத்திய அரசு நீண்டகால உத்திகளை மேற்கொள்வதோடு தேவைப்படும் ஆராய்ச்சி, பயிற்சி ஆகியன கிடைப்பதற்கு வழிவகுக்கும்.

11. சமுதாய நிலையிலும் பொருளியல் நிலையிலும் வசதி வாய்ப்பற்ற பிரிவினரின் குழந்தைகளுடைய கற்றல் இடர்ப்பாடுகளைப் போக்க குறைதீர் நடவக்கைகள் மேற்கொள்ளப்படும்.

12. இடம்பெயர்ந்த மக்களின் குழந்தைகளுக்காக, பெயர்ந்த இடத்திலோ, பெயர்ந்திருக்கும் இடத்திலோ வேறு பொருத்தமான வழியிலோ உறைவிடப் பள்ளிகள் ஏற்படுத்தப்படும். எவ்வித வேறுபாடுகளும் காட்டாமல் கல்வி நிகர் வாய்ப்பு அவ்விடங்களில் வழங்கப்படும்.

13. எவ்விதத்திலும் பாலின வேறுபாடு அல்லது வன்முறை இல்லாத அணுகுமுறை பின்பற்றப்படும். பெண்கள், கல்வியில் மேம்பட்டுவர எல்லா வகையான ஆக்கத் திட்டங்களும் செயல்படுத்தப்படும். இதற்காகப் பெண்கள் மிகுதியான முயற்சிகளை மேற்கொண்டு. உயர் பணிப்பொறுப்புகள் பெற்றுத் திகழுமாறான நிருவாக வேலை வாய்ப்புக்கள் வழங்கப்படும்.

14.கற்றல் இயலாமையுடையோர் உயர்கல்வியை பெறுமளவிற்கு உதவுகின்ற வகையில் ஆராய்ச்சிகள் மேற்கொள்ள அர்ப்பணிப்புடைய நிதி ஏற்படுத்தப்படும். அவர்களுக்குரிய கற்றல் நிறுவன உட் கட்டமைப்பு, படிப்புவசதி ஆகியன கவனிக்கப்பட்டு அவர்களின் செயல்திறன் மேம்படுத்தப்படும்.

15. வட்டார ஏற்றத் தாழ்வுகள், பழங்குடிமக்கட் பகுதிகள், பாலைவனப் பகுதிகள், மலைப்பகுதிகள், கடற்கரைப் பகுதிகள், என மாறுபட்டு அமையும் அனைத்தும் முறையாகக் கவனிக்கப்படும். ஒன்றிய , மாவட்ட அளவில் காணப்படும் கற்றலில் பின்தங்கியநிலை மறு பார்வைக்கு உட்படுத்தப்பட்டு அவற்றைக் கவனிப்பதற்கு புதிய தகுநிலைகள் (criteria) வகுக்கப்படும். கற்றல்தேர்ச்சி, தொழில் திறன் ஆகியனவற்றில் காணப்படும் இடைவெளியினை இனங்கண்டு கற்றலில் பின்தங்கியவர்களையும் சமுதாய, பொருளியல் , கல்விநிலை ஆகியனவற்றில் பின்தங்கியவர்களையும் மேம்படுத்த மாவட்ட அளவில் திட்டங்கள் தீட்டப்படும்.

### 7. எழுத்தறிவும் வாழ்நாள் முழுமையுமான கல்வியும்

1. எழுத்தறிவு, வாழ்நாள் முழுமையுமான கல்வி தொடர்பான தற்போதைய முனைப்புகள் மேலும் வலுப்படுத்தப்படும்: கல்விஏற்பாடு சீரமைக்கப்படும். இச் சீரமைப்பில் சுய உதவிக் குழுக்கள், அரசுசாராத் தொண்டுநிறுவனங்கள், பள்ளிக்கூடங்கள், கல்லூரிகள் , பிற கல்வி நிறுவனங்கள், இளைஞர் பெண்கள் அமைப்புகள், ஆகியனவற்றை ஈடுபடுத்தி பன்முக உத்திகள் பின்பற்றப்பட்டு இளைஞர்கள் முதியோர் ஆகியோரின் எழுத்தறிவு முழுமையாக எய்திடப்படும்.

2. அனைவருக்கும் எழுத்தறிவு என்னும் இலக்கினை வலுப்படுத்து வதற்காகத் தற்போது சட்டத்திற்கு உட்பட்டு அமைக்கப்பட்டுள்ள தேசிய அளவிலான தேசிய எழுத்தறிவு இயக்கம், மாநில அளவிலான எழுத்தறிவுக் குழுமம், மாவட்ட அளவில் லோக் சிக்ஷ சிமித்திஸ், ஒன்றிய கிராம அளவில் இயங்கும் வளமையங்கள் ஆகியன மாற்றி அமைக்கப்படவேண்டிய

தேவையுள்ளது. அனைவருக்கும் கல்வி என்னும் இலக்கினை அடைய மாநிலங்கள் மாவட்ட நிலையிலான செயல்திட்டத்தை வகுக்கும்.

3. வயதுவந்தோர் கல்வி திட்டச்செயல்களை வலுப்படுத்தவும்வயது வந்தோரின் கற்றல்வெளிப்பாடுகள், திறன்மேம்பாடு ஆகியன வற்றை அறிவியலார்ந்த முறையில் அளப்பதற்காகவும் சான்றிதழ்கள் வழங்குதற்குமான தகுநிலைகளை உருவாக்க வல்லுநர்கள் அடங்கிய உயர்மட்ட அமைப்பினை அரசு அமைக்கும். வயதுவந்தோர் கல்விக்கான தேசிய எழுத்தறிவு இயக்கம், தகுதிச் சான்றிதழ் வழங்கும் அமைப்புகளோடு இணைந்து கற்றலுக்கு முன்னுள்ள நிலையினையும் பின்னுள்ள நிலையினையும் அளக்கும் முறைகளை வகுக்கும்.

4. தொழில் திறன் வளர்ச்சி, கணினி முறையில் வரவுசெலவுக் கணக்கீடு, சட்டஅறிவு ஆகியன வயதுவந்தோர் கல்வித் திட்டச் செயல்களில் சேர்க்கப்படும்.

### 4.8 கல்வியில் தொழில் திறமையும் வேலைவாய்ப்பும்

1. பள்ளிக்கூடங்களிலும் உயர்கல்வி நிறுவனங்களிலும் உள்ள தொழில் கல்வி திட்டச்செயல்கள் வருவாய்மிக்க வேலைகள் கிடைப்பதற்கும் தொழில் முனைவுத் திறனை வளர்ப்பதற்கும் ஏற்றவாறு மீண்டும் தகவமைக்கப்படும்(Reoriented).

2. தேசிய தொழில் திறன் மற்றும் தொழில் முனைவுக் கொள்கை 2015 இல் சொன்னவாறு தொழில் திறன் மேம்பாட்டுத் திட்டச் செயல்கள் 25 விழுக்காட்டுப் பள்ளிக்கூடங்களிலும் உயர்கல்வி நிறுவனங்களிலும் இணைக்கப்படும்.

3. இடைநிலைப் பள்ளி மாணவர்களுக்கு வேலைவாய்ப்பினைப் பெருக்குவதற்காக அதற்கெனச் சிறப்புக் கவனம் செலுத்தப்பட்ட மாவட்டங்களுக்கு விரிவான திட்டம் தயாரிக்கப்படும்.

4. இடைநிலைக் கல்வி, உயர்கல்வி, தொழில் நுட்பக் கல்வி ஆகியனவற்றில் தற்போதுள்ள தொழிற்கல்வித் திட்டச்செயல்கள் NSQF வாயிலாக சமுதாய ஏற்புக் கருதியும் மேல் நோக்கிய, கிடைமட்ட இயக்கம் கருதியும் இணைப்பு ஏற்படுத்தப்படும். பன்முறைகளில் தொழில் திறனில் தேர்ச்சி பெற்று வெளியேறும் விருப்பு, வங்கிக் கடன் முறை, கடன் மாற்றத்திற்காக ஒத்துழைப்பு, தேசிய தொழில் தர அடிப்படையில் தேசிய ஏற்பு, விளைவு அடிப்படையிலான கணிப்பு, திறன்களை வெளிப்படுத்துதல் ஆகியனவற்றிற்காகச் சான்றிதழ் வழங்குவதற்கு நிறுவன முறையிலான நடைமுறை ஏற்படுத்தப்படும்.

5. இந்நாள் வரை கற்றல் முன்னறிவு பற்றி அளப்பதற்கான முறையெதுவும் ஏற்படுத்தப்படவில்லை. இக்குறையினைப் போக்கு வதற்காக ஓராண்டிற்குள் அரசு அத்தகைய திறனையும் செயலாற்றலையும் அளந்து சான்றளிக்கும்

www.TnpscExamOnlineResult.blogspot.in www.Kanchikalvi.com

முறையினை ஏற்படுத்த முயலும். முறையான கல்வியோ பயிற்சியோ பெறாமல் திறன்களை மட்டும் சான்றளிப்பு ஏதும் இல்லாமல் பெற்றிருப்பதை அளப்பதற்குரிய அமைப்பு முறை வகுக்கப்படும்.

6. பள்ளிக்கூடம் அல்லது கல்லூரி, தொழில் பிரிவு மன்றத்தோடு இணைந்து வேலைத் திறனைப் பெற்றிருக்கும் மாணவர்களுக்குச் சான்றிதழ்களை வழங்கி சுய தொழில் முனைப்பிற்கு உதவும்.

## 4.9 கல்வியில் தகவல் தொடர்பு நுட்பப் பயன்பாடு

1. கல்வியின் அனைத்து மட்டங்களிலும் களங்களிலும் தகவல் தொடர்பு நுட்பத்தைப் பயன்படுத்துவதற்கான எல்லா வகையான முயற்சிகளும் மேற்கொள்ளப்படும்.

2. கற்பித்தல்-கற்றலை மேம்படுத்தும் ஒரு கருவியாக தகவல் தொடர்பு பயன்படுத்துமாறான பயிற்சி ஆசிரியர்கல்வி பாடத்திட்டத்தில் ஒருங்கிணைந்த பகுதியாக இருக்கும்.

3. கல்வி நிறுவனங்களில் மாணவர்களின் சேர்க்கை முதல் நீங்கிச் செல்லும் வரையிலான அனைத்துப் பதிவுகளும் கணினியில் (Online) ஏற்றப்படுவது கட்டாயமாக்கபடும்.

4. ஆசிரியர் மாணவர் வருகைப் பதிவு, ஆசிரியர்கள், நிருவாகிகள் ஆகியோரின் செயல்திற மதிப்பீடு, மாணவர்களின் செயல்திறன், நிருவாகப் பணிகள், பதிவேடுகளையும் கணக்குகளையும் பதிதல் என அனைத்திற்கும் தொடர்பு நுட்பம் (communication technology) பயன்படுத்தப்படும்.

5. மேலாண்மையில் தகவல் நுட்பத்தை முழுமையாகப் பயன்படுத்து வதற்கான திட்டச்செயல்கள் முன்னுரிமை அடிப்படையில் மத்திய மாநில அரசுகளால் வகுக்கப்படும். பள்ளி மேலாண்மை, செயல்திறனுக்கு தகவல் நுட்பப் பதிவுமுறை ஆற்றல் வாய்ந்த கருவியாக விளங்கும்.

6. தகவல் தொடர்பு நுட்பத்தைத் தனித்த நிலையில் காண முடியாது. முறையான அறை வசதிகள், நம்பகமான மின்னிணைப்பு முதலிய பிற கட்டமைப்பு எதிர்கோள்களோடு இணைத்துப் பார்க்கப்பட்டு வருகிறது. பள்ளிவளாகப் பாதுகாப்பு, கட்டமைப்புப் பராமரிப்பு முதலியனவற்றோடு தொடர்புடையது. கல்வி வாய்ப்புக்கள், வசதிகள் ஆகியனவற்றை மேம்படுத்தும் திட்டச்செயல்களில் இக்கூறுகள் கவனிக்கப்படும். நம்பகமான மின்னிணைப்பு ஓர் எதிர்கோளாக இருப்பதற்கான வாய்ப்புள்ளதால், கல்வி நிறுவனங்களில் சூரிய சக்தியால் மின்சாரம் பெறும் முறை தகவல் தொடர்பு நுட்பத் திட்டச்செயல்களில் ஒருங்கிணைந்த தாக ஆக்கப்படும்.

7. இணைய வாயிலாக பெருக்கமிக்க திறந்தநிலை படிப்புக்கள் (MOOC), தகவல் தொடர்பு நுட்பத்தின் பிறிதொரு பயன்பாடாகும். இது தகவல் தொடர்பு



www.TnpscExamOnlineResult.blogspot.in www.Kanchikalvi.com

நுட்ப வாயிலான கல்வியை இடைநிலை, உயர்நிலை அளவில் மேம்படுத்த உதவும். குறிப்பாக இயலக் கூடிய செலவில் தரமான கல்வியைப் பெற ஊக்குவிக்கும்.

8. முன்னரே உருவாக்கப்பட்ட (பின்பற்றப்பட்ட) முறைகள் குறுகிய காலத்திற்குக் கொள்ளப்படும். உள்ளூர்த் தேவைகளுக்கு ஏற்பப் பயன்படுகின்ற முறைகள் உருவாக்கப்பட்டு முன்னரே உள்ளவற்றிற்கு இணைப்பாகக் கொள்ளப்படும். உள்ளூர்த் தேவைகளுக்கு ஏற்ப உருவாக்கப்படும் பிற மென்னுருக்களை ஆசிரியர்கள் பயன்படுத்தல் ஊக்குவிக்கப்படும்: வசதிகள் செய்துதரப்படும்.

## 4.10 ஆசிரியர் மேம்பாடும் மேலாண்மையும்

1. மாநில அரசுகளைக் கலந்தாலோசித்து ஆசிரியர்களைத் தேர்வுசெய்வதில் வெளிப்படை, தகுதி அடிப்படையிலுமான விதிமுறைகளும் வழிகாட்டல்களும் முறைப்படுத்தப்படும். மாநில அரசுகளால் , வெளிப்படை, தகுதி அடிப்படையில் ஆசிரியர்கள், முதல்வர்கள், கல்வி சார்ந்த பிற பணியாளர்கள் ஆகியோரைத் தேர்ந்தெடுக்கவும் பணியமர்த்தவும் தன்னாட்சி கொண்ட ஆசிரியர் தேர்வு வாரியம் அமைக்கப்படும்.

2. ஆசிரியர் கல்வி நிறுவனங்களில் காலியாக உள்ள அனைத்துப் பணியிடங்கள், முதல்வர். தலைமை ஆசிரியர் ஆகிய பணியிடங்கள் ஆகியன நிரப்பப்படும். நிறுவனத் தலைவர்களுக்கும் முதல்வர்களுக்கும் வழிகாட்டல் பயிற்சி கட்டாயமாக்கப்படும்.

3. ஆசிரியர்கள் நேர்மையான முறையிலும் நிகர்மையாகவும் (E q u i t a b l e ) பணியமர்த்தப் பட்டிருப்பதையும் அவர்ளுடைய பணி மாறுதல்ககளையும் வெளிப்படையாகத் தெரிவிக்கத் கூடியதுமான விதிமுறைகள் உருவாக்கப்படும். தொலை தூரத்திலிருக்கும் பள்ளிக் கூடங்களுக்கும்,செல்வதற்குக்கடினமானபகுதிகளில்உள்ளபள்ளிக்கூடங்களுக் கும் உள்ளூரிலிருந்து ஆசிரியர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர்.

4. மனித ஆற்றல் திட்டமிடல் ஆசிரியர்கள் அளவிலான, மாநில அளவிலான ஆசிரியர் தேவைகளுக்கு ஏற்ப மாநில அரசுகளால் மேற்கொள்ளப்படும். மேலும் ஒரு குறிப்பிட்ட கால அளவில் பயிற்சியற்ற ஆசிரியர்களுக்குப் பயிற்சி வழங்கப்படும். ஒப்பந்த அடிப்படையில் பணிபுரியும் ஆசிரியர் பணியிடங்கள் படிப்படியாக அவை ஒப்புதல் பெற்றபின்னர் தகுதிவாய்ந்த ஆசிரியர்களால் நிரப்பப்படும்.

5. ஆசிரியர் வராமை, காலியிடங்கள், பணிப்பொறுப்பின்மை ஆகியன தொடர்பான சிக்கல்கள் வலுவான அரசியல் ஒப்புதலோடும் விருப்போடும் தீர்க்கப்படும். தொடக்கப் பள்ளிகளைப் பொறுத்தவரை. ஒழுங்குநடவடிக்கை

எடுக்கும் அதிகாரம் பள்ளி மேலாண்மைக் குழுவிடம் ( SMCs ) இருக்கும். உயர்தொடக்கப்பள்ளி/ இடைநிலைப் பள்ளிகளில் தலைமை ஆசிரியர்கள் / முதல்வர்கள் ஆசிரியர்களின் ஒழுங்கின்மையினையும் வராமையினையும் செல்பேசிகள், உடல் அடையாளப் பதிவுக் கருவிகள் (Biometric devises) வாயிலாக கண்டறிந்து நடவடிக்கை மேற்கொள்வர்.

6. தொடக்கநிலைத் தயாரிப்பிற்காகவும் தொடர்ந்த பணி மேம்பாட்டிற்காகவும் மேற்கொள்ளப்படும் திட்டச்செயல்களின் விளைபயனை (effectiveness) மேம்படுத்தச் சிறப்புக் கவனம் செலுத்தப்படும். தற்போதையக் குறைபாடுகளை நீக்குவதற்காக, ஆசிரியர் கல்விக்கான பட்டய, பட்டப் படிப்புகள், ஆசிரியர் கல்வி நிறுவனங்கள் ஆகியனவற்றின் காலஅளவு, முறை, கட்டமைப்பு, கல்விஏற்பாடு, கற்பித்தல் முறை என்பன மறுபார்வைக்கு உட்படுத்தப்படும்.

7. ஆசிரியர்கல்வியின் பல்வேறு கூறுகளை உள்ளடக்கியும் துறை மேம்பாடு கருதியும் தேசிய அளவில் ஓர் ஆசிரியர் கல்விப் பல்கலைக் கழகம் நிறுவப்படும். மண்டல, கல்வி ஆராய்ச்சி மன்றங்கள் (NCERTs) மண்டல அளவிலான ஆசிரியர்கல்வி பல்கலைக் கழகங்களாக மாற்றப்படும்.

8. அனைத்து மாவட்ட ஆசிரியப் பயிற்சி நிறுவனங்கள், ஆசிரியர் கல்வி பட்டக் கல்லூரிகள் ( B.Ed Colleges ) ஆகியனவற்றிற்குத் தரமதிப்பீடு கட்டாயமாக்கப்படும். வட்டார வள மையங்களுகான தர அளவுகள் வரையறுக்கப்படும்.

9. வாழ்க்கைத் திறன்கள், ஒழுக்கக் கல்வி, உடல்நலக்கல்வி, கலை கைத்தொழில் போன்ற நூற்படிப்பு சாரா செயல்பாடுகளின் முதன்மையினைப் போற்றும் முறையிலான கூறுகளைக் கொண்டன வாகவும் அவற்றை பள்ளிக் கூடங்களில் கற்பித்தல் கற்றல் போக்கில் வலுவாக அறிமுகப்படுத்துவதை வலியுறுத்துவனவாகவும் ஆசிரியர் மேம்பாட்டுத் திட்டச் செயல்கள் அமையும்.

10. தேசிய அளவிலான ஆசிரியர் விருதுகளைத் தவிர, மாநில அளவிலும் மாவட்ட அளவிலும் விருதுகள் தகுநிலைகள் அடிப்படையில் ஏற்படுத்தப்படும். பள்ளி மேலாண்மைக்குழு இவ்விருதுகளுக்காகப் பரிந்துரைசெய்யும்.

11. தரமான கல்வியை வழங்குவதில் ஆசிரியருக்குரிய திறமை, ஊக்கமுடைமை, பொறுப்புடைமை, மாணவர்களின் கற்றல் வெளிப்பாடு ஆகியனவற்றிற்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

12. எல்லா ஆசிரியர்களும் மூன்றாண்டுக்கு ஒருமுறை தொழில் மேம்பாட்டிற்கான பணியிடைப் பயிற்சியில் பங்கேற்பது கட்டாயமாக்கப்படும். ஆசிரியர்கள் மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை கருவிப் பயன்பாட்டு நுட்ப முறையில் ( leverage technology) கற்பிப்பதற்கான பணியிடைப் பயிற்சிபெறுவதற்கு மத்திய மாநில அரசுகள் ஏற்பாடுகள் செய்யும்.

13. அரசு, தனியார் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் குறிப்பிட்ட கால இடைவெளியில் கணிக்கப்படுதல் கட்டாயமாக்கப்படும். கணிப்பீடு அவர்களின் பணிப்பொறுப்புயர்வு, ஊதிய உயர்வு ஆகியனவற்றிற்கு அடிப்படையாக அமையும். ஒவ்வோர் ஆசிரியரும் ஐந்தாண்டுக்கு ஒரு முறை கற்பித்தல் முறையில் திறன்பெற்றிருத்தல் , பாட அறிவு பெற்றிருத்தல் தொடர்பாகக் கணிக்கப்படுவர்.

14. ஆசிரியர்களுக்குக் கல்வி வழங்குவதற்குத் தனியான பணியாளர் இடம் ஒவ்வொரு மாநிலத்திலும் ஏற்படுத்தப்படும். SCERT, DIET , பிற ஆசிரியர்கல்வி நிறுவனங்களில் ஏற்பட்டுள்ள பெருமளவிலான பணியிடங்கள் அவற்றின் பணித்திறனைமேம்படுத்துவதற்காகவும் வலுப்படுத்துவதற்காவும் நிரப்பப்படும்.

## 4.11 கல்வியில் மொழியும் பண்பாடும் ( Language and Culture in Education)

1. அனைத்து மாநிலங்களும் மத்திய அரசு பகுதிகளும் விரும்பினால் தாய்மொழியையோ, வட்டார மொழியையோ பயிற்றுமொழியாகக் கொண்டு ஐந்தாம் வகுப்புரை கல்வி வழங்கலாம்.

2. மாணவர்களின் பன்னாட்டு இயக்கத்திற்கும் உலக அளவிலான அறிவைப் பெறுவதற்கும் ஆங்கிலஅறிவு முதன்மையான பங்கு வகிக்கிறது. எனவே குழந்தைகளை இம்மொழியில் வாசிக்கவும் எழுதவும் வல்லமை பெற்றவர்களாக ஆக்கவேண்டும். ஆகவே தொடக்கக் கல்வி நிலையில் தாய்மொழி அல்லது வட்டார மொழி பயிற்றுமொழியாக இருக்குமாயின் ஆங்கிலம் இரண்டாம் மொழியாக வேண்டும். உயர்தொடக்க, இடைநிலைக் கல்வி நிலையில் மூன்றாம் மொழியைத் தேர்ந்தெடுத்தல் அரசமைப்புச் சட்ட விதிகளுக்கு இணங்க அந்தந்த மாநில. பகுதி அதிகாரத்திற்கு உட்பட்டமையும்.

3. உயர்கல்வி நிறுவனங்கள் – சிறப்பாக தொழில் நுட்ப, பணிப்படிப்பு நிறுவனங்கள் இந்தியாவின் வளமான மரபுவழி, மொழி பண்பாட்டு பன்முகத் தன்மை, அறிவு முறைமை ( Knowledge system) ஆகியனவற்றைக் கற்கும் வாய்ப்பினை மாணவர்களுக்கு வழங்க வேண்டும்.

4. இந்தியப் பண்பாடு, உள்ளூர், மரபுவழி அறிவு ஆகியனவற்றிற்கு பள்ளிக்கல்வியில் போதிய இடம் அளிக்கப்படும். நிகர்மை, நிகர்வாய்ப்பு, சமூக நீதி, உடன்பிறப்புணர்வு, குடியாட்சிப் பண்பு, பொறுப்பார்ந்த விடுதலையும் உரிமையும், தேசிய ஒருமைப்பாடு ஆகிய விழுமங்களை எல்லா நிலைகளிலும் பதிப்பதற்காக ஒழுக்கக்கல்வி ஒருங்கிணைக்கப்படும்.

**5. இந்திய மொழிகளின் வளர்ச்சிக்கும் மேம்பாட்டிற்கும் சமஸ்கிருதத்தின் சிறப்பான முதன்மையினைக் கருத்திற்கொண்டும் , நாட்டின் பண்பாட்டு ஒற்றுமைக்கு அதன் தனித்தன்மை வாய்ந்த பங்களிப்பினைக் கருதியும் பள்ளிக் கூடங்களில் அதனைக் கற்பிப்பதற்கு வசதி செய்யப்படும். பல்கலைக்கழக**

**நிலையில் அம்மொழியைக் கற்பதற்கு மிகவும் தாராளமான வசதிகள் வழங்கப்படும்.**

6. குடிமை உணர்வு, ஒழுக்கம், காலந்தவறாமை, தூய்மை, நன்னடத்தை, பிறர் உணர்வை மதித்தல், மூத்தோர் ஒடுக்கப்பட்டோர் நலிந்தோர் பால் இரக்க உணர்வு, பெண்கள் பால் மதிப்பு, மாந்தநேய உணர்வு ஆகியனவற்றைக் கல்வி நிறுவனங்கள் மாணவர்களுக்கு ஊட்டும்.

## 4.12 விரிவான கல்வியின் வாயிலாகத் தன் மேம்பாடு (Self Development through Comprehensive Education)

1. யோகா, விளையாட்டுக்கள், தனி விளையாட்டுக்கள், என்.சி.சி, என்.எஸ்.எஸ், கலைக்கல்வி, பால சன்சாட், உள்ளூர் கலை, கைவினை, இலக்கியம், தொழில் திறன்கள், பிற பள்ளிக்கல்வி நடவடிக்கைகள் ஆகிய நூற்படிப்புச் சாராச் செயல்பாடுகள் கல்விஏற்பாட்டில் ஒருங்கிணைக்கப்பட்டு பள்ளிக்கூட அன்றாட வழக்காறுகளுடன் குழந்தைகளின் முழுமையான மேம்பாடு ஏற்படுத்தப்படும். மேலே சொல்லப்பட்ட வசதிகள் எல்லாம் பள்ளிகளின் ஏற்புக்கு உரிய முன்தேவைகளாகும்.

2. அரசு அல்லது மேலாண்மையால் பள்ளிக்கூடங்களுக்கு நூற்படிப்புச் சாரா செயல்பாடுகளுக்குத் தனியே நிதி ஒதுக்கப்படும்.

3. பொதுவாக, நலவாழ்வுத் துறையால் நிருவகிக்கப்படும் உடல்நலம் தொடர்பான செயல்பாடுகளுக்குப் பள்ளிக்கூடம், கல்வித் துறை ஆகிய இரண்டும் துணைநிற்கும். பள்ளிக்கூடங்கள் சுழற்சி முறையினை வகுத்து திட்டமிட்டு அதனைப் பின்பற்றி மருத்துவ சோதனைகள் நடப்பதை உறுதிசெய்யும். டிஜிட்டல் இந்தியா வின் ஒரு செயல்பகுதியாக பயன்பாட்டு மென்னுருக்கள் தயாரிக்கப்பட்டு குழந்தைகளின் உடல்நல நிலைமை கண்காணிக்கப்படும்.

4. தற்போது மதிய உணவு திட்டத்தால் நடைபெற்றுவரும் பள்ளிச் சத்துணவுத் திட்டச்செயல் சத்தான உணவுகளை வழங்குவதோடு சமுதாய நிகர்வாய்ப்பினையும் ஊக்குவித்துவருகிறது. இடைநிலைப் பள்ளி அளவிலும் மதிய உணவுத் திட்டச் செயல் நீட்டிக்கப்படும். ஆசியர்கள் மதிய உணவு சமைத்தல் பரிமாறுதல் போன்ற பணிப்பளுவில் ஈடுபடுத்தப்படமாட்டார்கள். மதிப்பார்ந்த பணி நிறுவனங்கள் மதிய உணவினைத் தயாரிப்பதற்கும் பள்ளிகளுக்கு அனுப்பதற்கும் ஈடுபடுத்தப்படும். உணவு தயாரித்து வழங்குவதற்கு பொதுத் தயாரிப்பு மையங்கள் ஏற்படுத்தல் ஊக்குவிக்கப்படும்.

## 4.13 பள்ளிக்கூடக் கணிப்பீடும் ஆளுகையும் (School Assessment and Goverenance)

1. பள்ளிக் கூடத்தின் தரம், ஆசிரியர்களில் தொழில் திறன், பள்ளிக் கூடங்களை வழிநடத்துதல், பள்ளிக்கூட மேலாண்மை , தன் மதிப்பீடு,

செயல்திறன் கணிப்பீடு ஆகியவற்றை அறிவதற்காக பல்வேறு வகையான அளவெல்லை, அளவுக்குறிப்புகள், கொண்ட கட்டமைப்பு நாடெங்கும் பயன்படுத்தப்படும். பின்னர் இக்கட்டமைப்பின்படி பள்ளிக்கூடங்கள் தரப்படுத்தப்பட்டு வரிசைப் படுத்தப்படும்.

2. பள்ளிக் கூட வாரியங்களைத் தரமதிப்பிடுவதற்கு ஒரு முறை ஏற்படுத்தப்படும்.

3. மத்திய , மாநில அரசுகள் பள்ளிக்கூட மேலாண்மைக்குழுவினை செயல்படுத்துதல் தொடர்பான கட்டமைப்புக் கொள்கையிலுள்ள இடைவெளிகளைக் கல்வி உரிமைச் சட்டத்தின் கட்டமைப்பிற்குள் நின்று கவனித்துச் செயல்படுத்துவதற்கும் நெறிப்படுத்துவதற்குமான வழி காட்டல்களைத் தரும்.

4. பள்ளிக்கூட மேலாண்மைக் குழுக்களுக்கு மேம்பட்ட நிலையில், தேர்தல் முறை, கூட்ட நிகழ்வுகளின் எண்ணிக்கை, குழுவின் கால அளவு, பொறுப்புகள், கடமைகள், உரிமைகள் செயல்பாடுகள் ஆகியன பற்றிய வழிகாட்டல்களை மாநிலஅரசுகள் வழங்கும். பள்ளி மேலாண்மைக் குழு பயிற்சிக்காள நிதிகளை ஒதுக்குவதற்கு மாநிலஅரசுகள் முயலும்; பள்ளிக்கூடங்கள் பள்ளி மேம்பாட்டுத் திட்டங்கள் நிறைவேற்றுவதற்காக உரிய நேரத்தில் மானியங்கள் பெறுவதை உறுதிசெய்யும். பள்ளிகூட மேம்பாட்டுத் திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடுகள் மாவட்ட அளவிற்கான செலவினங்களோடு சேர்க்கப்படும்.

5. தலைமையாசிரியர் அல்லது முதல்வர்களின் செயல் திறத்தால் பள்ளிக்கூடங்கள் சில சிறப்பாகச் செயல்படுவதற்கான சான்றுகள் உள்ளன. எனவே தலைமையாசிரியர் பணியிடங்கள் தனியாக ஏற்படுத்தப்பட்டு 5 ஆண்டு பட்டறிவு பெற்றிருக்கும் ஆசிரியர்களிலிருந்து தகுதியும் நாட்டமும் கொண்டோர் தலைமையாசிரியர் அல்லது முதல்வராகத் தேர்வுசெய்யப்படுவர். தற்போது காலியாக இருக்கும் தலைமையாசிரியர் அல்லது முதல்வர் பணியிடங்கள் இந்த முறையில் காலப்போக்கில் நிரப்பப்படும்.

6. பள்ளிக்கூட ஆளுகை மேலும் உயர்த்தப்படப் பள்ளிக்கூட வழிகாட்டல் பற்றிய வரையறையில் விரிவாக்கம் தேவை. முழுமையான கட்டமைப்புத் தொடர்பான கூறுகள் அதில் வரையறுக்கப்படவேண்டும். பள்ளித் தலைமையின் பொறுப்புகள், பங்கேற்புகள், பள்ளிக்கூடத் தலைமைத் திறனை ஊட்டுகின்றனகட்டமைப்புக்கூறுகள்,தலைமையினைத் தேர்ந்தெடுப்பதற்கான வலுவான, வெளிப்படையான செயல்முறைகள், தலைமையர் களுக்கான ஊக்குவிப்புத் திட்டச்செயல்கள், தொழில் மேம்பாட்டிற்கான வாய்ப்புக்கள் முதலியன யாவும் தெளிவாக வரையறுக்கப்படும்.

7. முதல்வர் / தலைமை ஆசிரியர்கள் நிறுவனங்களின் கல்வியின் நிலைக்கும் அதன் முன்னேற்றத்திற்கும் பொறுப்பேற்கவேண்டும். தலைமை ஆசிரியர் /

முதல்வருக்கான பதவிக்காலம் பற்றி கல்வித்துறை முடிவெடுக்கும்.

## 4.14 உயர்கல்வியில் ஆளுகைச்சீர்திருத்தங்கள்(Governance Reforms in Higher Education )

1. மனித வள மேம்பாட்டு அமைச்சகத்திற்கு உலக அளவில் தோன்றும் புதிய அறிவுப் பரப்புக்கள்/ துறைகள் / களங்களையும் கற்றல் முறைகளையும் கல்விஏற்பாட்டுக் கணிப்பீட்டு சீர்திருத்தங்களையும் அடையாளங்காண உதவுவதற்கு ஒவ்வொரு ஐந்தாண்டிலும் கற்பித்தல் கற்றல் துறை வல்லுநர்கள் அடங்கிய கல்விக் குழு உலகஅளவில் ஏற்பட்ட மாற்றத்தையும் தேசிய அளவிலான எதிர்பார்ப்பையும் ஏற்படுத்துவதற்காக அமைக்கப்படும்.

2. தொழில்துறை சார்ந்தோர், முன்னாள் மாணவர் ஆசிரியர் எனப் பல்வகைப்பட்டோரின் சார்பாண்மை கொண்ட உறுப்பினர்கள் அடங்கிய ஆளுகைக் குழு தெளிவாகவும் வெளிப்படைத் தன்மையுடையதாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டோரால் அமையவேண்டும்.

3. பட்டப் படிப்பு, பட்ட மேற்படிப்பு, ஆய்வுப் படிப்பு ஆகியனவற்றை ஒருங்கிணைத்த பல்கலைக் கழக முறைமையை ஏற்படுத்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்படும். இம்முறைமத்தில் பட்டப் படிப்பு, பட்ட மேற்படிப்பு ஆகியனவற்றிற்குக் கற்பித்தல் ஒருங்கிணைப்பு அமையும். அதாவது எல்லாப் படிப்புக்களுக்கும் கற்பித்தலில் தொடர்பும் ஒருங்கிணைப்பும் காணப்படும். பல்கலைக் கழகங்கள் ஓர் அறிவுத் துறை சார்ந்ததாக மட்டும் இல்லாமல் பலவற்றைக் கொண்டிருக்கும்.

4. 1968, 1985/ 92 ஆகிய ஆண்டுகளின் கல்விக் கொள்கைகளிலும் இந்தக் கொள்கையிலும் வலியுறுத்தப்படும் தேசிய கல்விப் பணியை (I E S ) நடைமுறைக்குக் கொண்டுவந்து செயல்படுத்த அரசு முயலும். மனித வள மேம்பாட்டு அமைச்சகம் பதவிகளைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் கொண்ட முறையில் IES பணி விளங்கும். IES பணிகள் நடைமுறைக்கு வரும் வரை, மாநில அரசின் ஒப்புதலுடன் தற்போதுள்ள கற்பித்தல், கல்வி நிருவாகத் துறையில் பல மாநிலங்களிலும் பணியாற்றுவோர்களிலிருந்து சிறப்புத் தேர்வு வாயிலாகத் தனி அலுவலர்கள் UPSC யால் தேர்ந்தெடுக்கப்படுவர்.

5. அரசுக்கு எதிராகவுள்ள புகார்களை விசாரிக்கவும் தனியார் பள்ளிகள் தொடர்பான வழக்குகளை விசாரிக்கவும் தனியாக மத்தியிலும் மாநிலங்களிலும் தீர்ப்பாயங்கள் நிறுவப்படும். இவை ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நடுவர்களின் தலைமையில் இயங்கும். இத் தீர்ப்பாயங்கள் விரைவாக வழக்குகளை விசாரித்து முழுமையான தீர்ப்புகளை வழங்கும் அதிகாரம் கொண்டது.

6. குடியாட்சி முறை, ஆளுகைப் போக்கு , வாதாடல், கலந்துரையாடல், பல்வகை எண்ணங்கள் ஆகியனவற்றைக் குடியாட்சி ஆர்வத்தை மேம்படுத்தும் வகையில் மாணவர் அமைப்புகளின் ஆக்கமுடைய பங்கேற்புகளை அரசு ஏற்று ஊக்குவிக்கும். எனினும், கல்வி நிறுவன

வளாகங்களில் இடைஞ்சல் ஏற்படுத்தும் செயல்களிலும் இணக்கமற்ற சூழலை ஏற்படுத்துவதிலும் வெளியாட்கள், தாங்கள் சேர்ந்திருக்கும் படிப்புகுரிய காலத்திற்கு அதிகமான ஆண்டுகள் படித்துக் கொண்டிருப்போர் ஆகியோர் தலைமையில் மாணவர்கள் ஈடுபடுகின்றனர். வெளியாட்களும் படிப்புக் காலம் முடித்த மாணவர்களும் மாணவர் அரசியலில் ஈடுபட்டு கல்விச் செயல்பாடுகளுக்கு இடைஞ்சல் ஏற்படுத்துவதையும் அவர்கள் மாணவர் விடுதிகளில் தங்கிக்கொண்டு நிறுவன வசதிகளைத் தவறாகப் பயன்படுத்துவதையும் கண்டறிந்து நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படும்.

7 . அனைத்து உயர்கல்வி நிறுவனங்களும்குறை தீர்க்கும் அமைப்பினைக் கொண்டிருக்கவேண்டும். இயல்பு நீதியடிப்படையில் எதிர்வாதத்தை கேட்காத நிலையில் எவ்வகையான தண்டனையினை மாணவருக்கோ, துறைக்கோ, அமைப்பிற்கோ வழங்கக் கூடாது.

8. தற்போதுள்ள இணைப்புக் கல்லூரி முறை தொடர்ந்து நீடிக்கும். ஆனால் ஒரு பல்கலைக் கழகத்தின் கீழ் 100க்கு மேற்பட்ட இணைப்புக் கல்லூரிகள் இருத்தலாகாது. 100 கல்லூரிகளுக்கு மேற்பட்டிருக்கு மாயின் வரம்பிற்கேற்ப மாற்றியமைக்கப்படும்.

9. விதிகள் அடிப்படையில் ஊக்குவிப்புடன் மீத்திறத்தை உயர்த்தும் செயல்பாடுகளுக்காக பொது நிதியுடன் உயர்கல்வி நிறுவனங்கள் அறிமுகப்படுத்தப்படும். எல்லாப்பொதுநிதிநிறுவனங்களும்தங்கள் தன்னாட்சித தகுதியையும் நிதி, நிருவாகப் பொறுப்பினையும் தக்க வைத்துக்கொள்ளக் குறிப்பிட்ட இலக்குகளோடு குறிப்பிட்ட கால அளவிற்கான முன்னோக்குத் திட்டத்தைத் தயாரிக்கும்.

### 4.15 உயர்கல்வியில் கட்டுப்பாடு (Regulation In Higher Education)

1. தேசிய உயர்க்கல்வி ஆராய்ச்சி நிதி திட்டச்செயலை நிருவகிக்க சார்பற்ற இயக்கமுறை ஏற்படுத்தப்படும்.

2. முன்னறிப் பகுப்பாய்வு,மனித ஆற்றலைத் திட்டமிடல், எதிர்கால நடவடிக்கைகளைத் திருத்துதல் ஆகியனவற்றிற்கு உதவுகின்றவாறு உயர்தரமான புள்ளிவிவர வல்லமைசார் மேலாண்மை தகவல் முறைமம், தரவு திரட்டல் , தொகுத்தல், ஒருங்காக்கல் ஆகிய பணிகளை மேற்கொள்ளும் மத்திய அமைப்பாக மத்திய கல்வியியல் புள்ளிவிவர முகமை ( C E N T R A L EDUCATIONAL STATICTICS AGENCY - CESA). நிறுவப்படும். இது உயர்கல்வி நிறுவனங்களின் உட்கட்டமைப்பு, புதிய கட்டுமானங்கள், தரஉயர்வு ஆகிய தரஅளவைகளின் அடிப்படையில் புவியியல் குறியீட்டுத் தீர்வுகளைக் கண்டறியும்.

3. தரமதிப்பீடு வழங்கும் முகமைகளோடு கலந்தாலோசித்து குறிப்பிட்ட கால

அளவில் பல்கலைக் கழகங்கள், கல்லூரிகள் ஆகியனவற்றின் கல்வி தரத்தினை மாநில உயர்கல்வி மன்றம் நெறிபடுத்துதல் கட்டாயமாக்கப்படும்.

4. சேர்க்கை, கட்டணங்கள், துறையின் திட்டச் செயல்கள், தேர்வு முடிவுகள், பணியமர்த்தம், ஆளுகை , நிதிநிலை, செயல்பாட்டு ஒப்பந்தங்கள், மேலாண்மை, படிப்புசார்ந்த அறிக்கை, நூற்படிப்பு சார நடவடிக்கைள் முதலியன பற்றியும் நிறுவனம் தொடர்புடைய இவைபோன்ற தகவல்களையும் வெளிப்படையாகத் தருகின்ற வலைத்தளத்தை ஒவ்வோர் உயர்கல்வி நிறுவனமும் கொண்டிருக்கும்.

## 4.16 உயர் கல்வியில் தர உறுதிப்பாடு ( QUALITY ASSURANCE IN HIGHER EUCATION)

1. பன்னாட்டு அளவில் தர அளவையிடல் தரும் முறையினை ஆராய்வதற்காக வல்லுநர் குழு அமைக்கப்படும். அக்குழு சிறப்பாகச் செயல்பட்ட பாடத்திட்டத்தினைப் பின்பற்றிய நாடுகளின் நடைமுறைகள் சிலவற்றின் அனுபவங்களை எடுத்துக்கொண்டு , NAAC (தேசிய தர மதிப்பீட்டு மன்றம்), NAB ஆகிய அமைப்புக்களை மறு சீரமைக்கவும் தரமதிப்பீடு செய்வதற்கான அளவுருக்கள், தகுநிலை ஆகியனவற்றை மறுவரையறை செய்வதற்குமான பரிந்துரைகளைத் தரும்.

2. ஒவ்வொரு நிறுவனத்தின் மதிப்பீடு / தரஅளவைவிடல் விவரங்கள் மாணவர்களும் , பிற பயனாளர்களும் அறிவதற்காகப் பொதுப் பார்வைக்கு அதற்கென அமைக்கப்பட்ட வலைத்தளம் வாயிலாகத் தரப்படும்.

## 4.17 திறந்தநிலை, தொலைதூரக் கற்றலும் பெருமளவு வான்வழி கற்றல் படிப்புகளும்

(Open and Distance Learning (ODL) & MOOCs- Massive Online Open Learning)

1. திறந்தநிலை, தொலைதூரக் கற்றலும் பெருமளவு வான்வழி கற்றல் படிப்புகளின் (O D & M O O C s ) கற்றல் தேர்ச்சியினை உயர்த்தல், ஒழுங்குமுறை, தரநிலையினை O D L / M O O C இல் நிலைநிறுத்தல் ஆகியனவற்றிற்கான தன்னாட்சி அமைப்பு ஏற்படுத்தப்படும். இது, ODL/ MOOC இன் முறையான வளர்ச்சிக்கும் ஒழுங்கான இயக்கத்திற்குமுரிய விதிமுறைகள், தரநிலைகள், வழிகாட்டல்கள் ஆகியனவற்றைத் தயார்செய்யும். படிப்புகளின் ஏற்புத்தன்மை, MOOC வாயிலாகப் பெற்ற கற்றல் அளவின் குறியீடுகளைத் முறைப்படுத்த்ல் , பட்டம் வழங்குதல் அவற்றிற்கு ஏற்பளித்தல் ஆகியனவற்றிற்கான முறைகளை உருவாக்கும்.

2. ODL/ MOOC இல் படிப்பும் திட்டச் செயல்களும் வழங்கும் எல்லா நிறுவனங்களும் தேசிய, உள்ளூர் தேவைகளுக்கு ஏற்ப 1இல் செரல்லப்பட்ட

தன்னாட்சி அமைப்பால் விதிக்கப்பட்ட விதிமுறைகள், தரங்கள் அடிப்படையில் வழங்கப்படும் பட்டங்களுக்கு ஏற்பு வழங்கவும் தரக்குறியீடுகளை ஒழுங்குபடுத்தவதற்குமான தரப்படுத்தப்பட்ட திட்டச் செயல்களை உருவாக்கும்.

3. ODL/ MOOC வழங்கும் பல்கலைக் கழகங்கள்/ நிறுவனங்களுக்குத் தர அளவு வழங்கி அவற்றின் தரத்தை உறுதிசெய்தல், புதுமைகளை ஊக்குவித்தல், படிப்புமுறைகளை நவீனமாக்கல் ஆகியவற்றிற்கான முறைகள் வகுக்கப்படும்.

4. படித்தற்கான மென்னுருக்கள், களஞ்சியங்கள், கட்டற்ற கல்வி வளங்கள் (OERs), MOOCs, 24X7 மென்னுருச் சேவை, தனிப்பயிற்சி, ஆற்றுப்படுத்தல் சேவை, வலைத்தளக் கருத்தரங்குகள், விவாதக் கூட்டங்கள், வலைத் தளங்களை ஒளிபரப்பல், நூலக வசதி, இணைய வழி ஆய்வகம், மின்னணுக்கற்றல் கட்டகங்கள், இணைய வாயிலாகத் திட்டச் செயல்கள், ஒப்படைப்பு வழங்குதல், மாணவர் செல்திறன் பற்றிப் பின்னூட்டம் தருதல், இணைய வழி தேர்வு நடத்துதல், முடிவுகளை அறிவித்தல், புகார்களைக் கவனித்தல் ஆகியனவற்றை மேற்கொள்வதற்காக கற்போருக்கு துணைசெய்யும் பணி அமைப்புகள் நிறுவப்படும்.

5. தேசிய திறந்தநிலைக் கற்றல் நிறுவனம் (NIOS) தொழில் முனைப்பு மற்றும் தொழில் திறன் மேம்பாட்டு அமைச்சகத்தோடு இணைந்து தன்நிலையினை மீண்டும் வரையறைப்படுத்தித் தொழிற்கல்வியின் வலுவான தேவையினைக் கவனிக்கும். மேலாண்மை, நெறிப்படுத்தல், NIOSஐ மேற்பார்த்தல் ஆகியன சரியான முறையில் கவனிக்கப்படும்.

### 4.18 கல்வியைப் பன்னாட்டு வயமாக்கல் (Internationalization of Education)

1. மேம்பட்ட தரத்தினதாகக் கருதப்பட்ட 200 பல்கலைக் கழகங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட பல்கலைக் கழகங்கள் இந்தியப் பல்கலைக் கழகங்களோடு இணைந்து அவை இந்தியாவில் நிறுவப்படுவதற்காக ஊக்குவிக்கப்படும். . இயலுமாயின் அந்தப் பல்கலைக் கழகங்கள் தங்கள் பட்டங்களை இந்தியாவில் படிக்கின்ற இந்திய மாணவர்களுக்கு வழங்கவும் அவை அப்பல்கலைக் கழகங்கள் அமைந்துள்ள நாடுகளில் ஏற்பு உடையதற்குமான சட்டங்கள் தேவைப்படின் இயற்றப்படும். விதிகளும் ஒழுங்குமுறைகளும் வகுக்கப்படும்.

2. பன்னாட்டு வயமாக்கல் இருவழி செயல்பாடாதலால் இந்தியப் பல்கலைக் கழகங்களின் வளாகங்கள் தேவைப்படின் பொருத்தமான சட்டம்/ சட்டத் திருத்தம்/ விதிமுறைகளால் வெளிநாடுகளிலும் அமைக்கப்படும்.

3. வெளிநாடுகளில் இந்திய மாணவர்களை ஏற்றுக்கொள்வதற்காகவும் பன்னாட்டு மாணவர்களை ஈர்ப்பதற்காகவும் இந்தியாவிலுள்ள உயர்கல்வி

நிறுவனங்கள் கல்வி ஏற்பாட்டினைப் பன்னாட்டு மட்டத்தில் ஒத்திருக்குமாறு ஆக்குவதற்கும் உலக அளவில் சிறப்பாகத் தரப்படுத்தப்பட்டுள்ள நிறுவனங்களோடு இணங்கியிருப்பதற்குமான செயல்களை மேற்கொள்ள ஊக்குவிக் கப்படும். இந்தியப் பண்பாடு, இந்தியாவின் தொடர்புடைய ஆராய்ச்சிகளில் ஈடுபட வெளிநாட்டு மாணவர்கள் இந்தியாவிற்கு வருவதால் இக்களங்களில் ஆராய்ச்சிகள் மேம்படுத்தப்பட்டு பன்னாட்டு மாணவர்களின் தேவைகள் நிறைவுசெய்யப்படும்.

4. வெளிநாட்டு மாணவர்களின் மொழியறிவுக் குறைபாட்டினைப் போக்கவோ உயர்மட்டக் கல்வி ஏற்பாட்டில் எதிர்ப்படும் சிக்கல்களைத் தீர்க்கவோ உயர்கல்வி நிறுவனங்கள் மொழி இடைவெளி நிரப்பு படிப்புகளை (Bridge Courses) நடத்தும் .

5. வெளிநாட்டிலுள்ள படிப்புத்துறைகள் இந்தியாவிலுள்ள உயர்கல்வி நிறுவனங்களோடு இணைந்து செயல்படுவதை ஊக்குவிப்பதற்காக விதிமுறைகளும் ஒழுங்குக் கட்டுப்பாடுகளும் மீள்நோக்கிற்கு உட்படுத்தப்படும். வெளிநாட்டு மாணவர்கள் / படிப்புத் துறைகளால் விசா, பதிவு/ தங்குதற்கான கால நீடிப்பு, வரிவிதிப்பு விதிகள், கட்டுப்பாடுகள் தொடர்பாக எதிர்கொள்ளப்படும் சிக்கல்கள் கவனிக்கப்படும்.

6. அரசு நிதி அளிக்கப்படும் உயர்கல்வி நிறுவனங்களுக்கு, மேலும் நிதிவளங்கள் ஒதுக்குவதற்கான தகுதிக் கூறுகளுள் ஒன்றாகப் பன்னாட்டு வயமாக்கல் கருதப்படும்.

7. படிப்புத் தொடர்பாகத் தொடர்ந்து வலுவாகவும் நம்பகமாகவுமான ஒப்புதல்/ஏற்பு/தரவரையறை/தர உறுதியினை உயர்கல்வி நிறுவனங்களுக்கும் படிப்புத் திட்டச் செயல்களுக்கும் தந்துவரும் நாடுகளோடு பேச்சுவார்த்தை நடத்த அரசு முனைப்புக்காட்டும். தரச் சான்றிதழ் பெற்ற உயர்கல்வி நிறுவனங்கள் வழங்கும் தகுதிகளுக்கு ஏற்பளிக்கும் நாடுகளை ஒரு குழுவாக இணைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

8. ஆண்டு அடிப்படையில் படிப்புகளுக்கு ஏற்பு வழங்கும் முறையிலிருந்து தேர்ச்சிக் குறியீடு அடிப்படையில் (credit based) ஏற்புவழங்கும் முறைக்கு படிப்படியாகச் செல்ல நடவடிக்கை எடுக்கப்படும்.

## 4.19 உயர்கல்வியில் துறை வளர்ச்சி ( Faculty development in Higher Education)

1. பணியாளர்களைத் தேர்ந்தெடுத்தல், பதிவு உயர்வு வழங்குதல், வழங்காது நிறுத்துதல் ஆகியன தொடர்பாகப் பன்னாட்டு அளவில் பெயர்பெற்ற பல்கலைக் கழகங்களும் நிறுவனங்களும் பின்பற்றுகின்ற முறைகளைப் பற்றி அறிவதற்கு வல்லுநர்கள் அடங்கிய செயற்குழு அமைக்கப்படும். இது,

உயர்கல்வி நிறுவனங்கள் அறிவார்ந்து கல்வியில் சிறந்து மேம்படுவதற்கான வழிமுறைகளைப் பரிந்துரைக்கும்.

2. ஆற்றல் மிக்க இளைஞர்களை கற்பித்தல் தொழிலுக்கு ஈர்ப்பதற்கான தேசிய தொடர்செயல்முனைப்பு (Campaign) மேற்கொள்ளப்படும். M.Phil., Ph.D. போன்ற ஆய்வு மாணவர்களுக்குப் படிப்பு உதவியாளர்கள், படிப்புக்குத் துணைபுரிபவர் எனப் பணிப்பொறுப்புக்கள் வழங்கப்பட்டு அவர்கள் கற்றல் தொழிலில் ஈர்க்கப்படுவர்.

3. புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட துறை ஆசிரியர்களுக்குத் தூண்டல் பயிற்சி 3-6 மாத அளவில் நடத்துவதற்காக தேசிய, மாநில சிறப்புப் பயிற்சிக் கழகம் நிறுவப்படும்.உயர்கல்விநிறுவனங்களில்கற்பித்தல்பணியைமேற்கொள்வதற்கு முன்னர் இந்த தூண்டல் பயிற்சியின் சான்றிதழ் பெறுதல் கட்டாயமாக்கப்படும். தூண்டல் பயிற்சியில் கற்பித்தல் முறைகள் ஆய்வுமுறைகள் ஆகியனவற்றில் பயிற்சி வழங்கப்படும். இணைய வகுப்புகள், கூட்டாகக் கற்றல், தனியாள் அணுகுமுறை, தகவல் தொடர்பு நுட்பம், கல்வி ஏற்பாட்டு கட்டமைப்பு, வடிவமைப்பு, பாலினம் பற்றிய விழிப்புணர்வு, சமுதாயத்தின் பன்முகத் தன்மை, தொழில் ஒழுக்க நெறிகள். புதுமை நடைமுறைகளைப் பகிர்ந்துகொள்ளுதல், கல்வியில் அண்மைக் கால மேம்பாடு முதலியன இப்பயிற்சியில் பதிக்கப்படுவனவாகும். தூண்டல் பயிற்சியைத் தொடர்ந்து குறிப்பிட்ட பாடங்களில் கற்பித்தல் தேர்ச்சி பெறுவதற்கான பயிற்சி 4 – 6 வார அளவில் வழங்கப்படும். இப்பயிற்சி பணியாற்றும் நிறுவனத்தில் வழங்கப்பட்டு நிறுவனச் சூழல், பண்பாடு பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும். இதனால் அந்நிறுவப் பணிகளில் பொறுப்புணர்ச்சி ஏற்படும்.

4. தகவல் தொடர்பு நுட்ப மேம்பாடு, அறிவின் புதிய பரிமாணங்கள், கற்போரிடம் மாறுபட்டுவரும் பதிவுகள் ஆகியனவற்றாலும் ஆசிரியருக்கான பதிவுகள் மிகப் பெரிய மாற்றத்திற்கு உள்ளாகியுள்ளது. இந்த மாற்றச் சூழலில் சுய கற்றல், நடைமுறைத் தன்மையான இணைந்து கற்றல் ஆகிய புதிய கற்றல் முறைகளை இணைந்து கற்போர், ஆசிரியரின் பங்கு மறுவரையறைப்படுத்தப்படுகிறது. இதனால் அளவீட்டிலும் தேர்விலும் சீரமைப்புகள் தேவைப்படுகின்றன.

5. பொது நிதியால் இயங்கும் நிறுவனங்களின் கல்விப் பொறுப்பினை உறுதிசெய்வதற்கு உடனாளர்களின் மறுபார்வை யோடு துறையின் செயல்திறனை அளப்பதற்கு ஓர் அணுகுமுறை மேற்கொள்ளப்படவேண்டும்.

6. தொழில், அரசுப் பணி முதலிய துறைகளிலிருந்து கல்வித்துறைக்கும் இத் துறையிலிருந்து அத்துறைகளுக்கும் கிடைமட்ட நிலையில் பணிகளை மாற்றுவதற்கு ஏற்றவாறான தேர்ந்தெடுத்தல் , பணியமர்த்தலுக்கான பொருத்தமான கொள்கை வகுக்கப்படும். இத்தகைய கொள்கையால் பிற துறையினரும் பணிமாற்ற முறையில் பணியாற்றிட இயலும்.

7. மதிப்பார்ந்த உயர்கல்வி நிறுவனங்கள் வழிகாட்டல் திறனை மேம்படுத்துதற்காகக் குறுகிய காலத் திட்டச்செயல்களை மேற்கொள்ளும் மையங்களாகச் செயல்பட ஊக்குவிக்கப்படும். இத்தகைய திட்டச்செயல் துறையில் பணிமூப்புடையவர்களுக்கு செயல் , கட்டகங்களைத் தயாரித்தல், கட்டகங்களைப் பகுத்தாய்தல், நிதிகளைக் கையாளல், கல்வி நிதி சார் மனித வளங்களை மேற்பார்த்தல் . மோதல்களைத் தீர்த்தல், நலிவுற்றோர் பற்றிய விழிப்புணர்வூட்டல், முதலியனவற்றை உள்ளடக்கி , நிருவாக மேலாண்மைத் திறன்களை மேம்படுத்தும்.

## 4.20 ஆராய்ச்சி, புதுமை, புதுஅறிவு ( RESEARCH, INNOVATION, NEW KNOWLEDGE)

1. பொது தனியார் துறைகளில் அடுத்த பத்தாண்டுக்குள் பொது, தனியார் பிரிவுகளிலிருந்து உயர் கல்வியில் சிறப்புயர்வு துறைகள்/ துறைப் பிரிவுகள் குறைந்தது100 ஏற்படுத்தப்படும். இவை உயர்கல்வியில் ஆராய்ச்சிகளையும் புதுமைகளையும் ஊக்குவிக்கும். தனியார் அறக்கட்டளையினர், வள்ளன்மை மிக்கவர்கள் ஆகியோர் அடங்கிய சிறப்புயர்வு மையங்கள் ஏற்படுத்துவதற்கான உரிமைகள் வழங்கப்படும்.

2. கல்வியியல் திட்டம், நிருவாக தேசிய பல்கலைக் கழகம் நடைமுறைத் தேவையான ஆராய்ச்சிகளை மேற்கொள்வதற்காக தெளிவான திட்டம் வகுக்கப்படும்.

3. புதிய அறிவுகளை உருவாக்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். உயர்கல்வியின் கல்விஏற்பாட்டில் இப்புதிய அறிவுகள் இடம்பெறச் செய்து மென் ஆற்றலில் ( SOFT SKILL ) இந்தியாவின் நிலை வலுப்படுத்தப்படும்.

4. புதுமைகள், ஆக்கச் செயல்கள், தொழில் முனைவுகள் ஆகியனவற்றை உயர்த்த 100 அறிவுப் பொதிவு மையங்கள் வரும் ஐந்து ஆண்டுகளில் ஏற்படுத்தப்படும்.

5. புதிய அறிவுகளைப் பயன்படுத்தும் நோக்கில் மனித வளங்களை மேம்படுத்த பன்னாட்டு இணைவு மற்றும் தொடர்பு முறை ஊக்குவிக்கப்பட்டு புதிய அறிவுகள் நிலைநிறுத்தப்பட பல்துறை ஆய்வுகள் கவனத்திற் கொள்ளப்படும்.

## 4.21 கல்விக்கான நிதி (FINANCING EDUCATION)

1. கல்விக்கான மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (GDP) 6 விழுக்காடு கல்விக்காகச் செலவுசெய்யப்படவேண்டும் என்ற நிலுவையிலுள்ள இலக்கினை அரசு நடிவடிக்கை எடுக்கும்.

2. அரசு முயற்சிகளுக்கு மேலும் ஊக்கமளிக்கும் வகையில் தனியார்கள் ,வள்ளன்மை மிக்கோர், பெரு வணிக நிறுவனத்தினர் என அனைவரும் கல்வி வளர்ச்சிப் பொறுப்புக்களில் ஊக்குவிக்கப்படுவர். கல்விக்கான உட்கட்டமைப்புசெலவுகளுக்கு வரிச்சலுகை வழங்குவதன் வாயிலாக தனியார்கள் கல்வி முதலீடு ஊக்குவிக்கப்படும். எனினும் கல்வியின் முதன்மையான செயபாடுகளுக்கு அரசு நிதி ஒதுக்கம் தொடரும் . மற்றச் செயல்பாடுகள் தனியார் மூலதனம் வாயிலாக நடைபெறும். ஆராய்ச்சி வளர்ச்சிக்கான FDI , தர உயர்விற்காகவும் கல்வி நிறுவனங்களில் பிற கல்விச் செயல்பாடுகளுக்கும் தனியார் மூலதனத்தைப் பெறுதல் ஓர் உத்தியாகக் கொள்ளப்படும்.

3. மிகுந்த முதலீடுகள் தேவைப்படுவதால் புதிய நிறுவனங்களை ஏற்படுத்துதல் தவிர்க்கப்படும். மாறாக தற்போதுள்ள நிறுவனங்களின் திறனாய்வு விரிவுபடுத்தப்படும்.

4. வாய்ப்பற்ற பிரிவினருக்குக் கட்டணத்தை விட்டுக்கொடுப்பதோடு, பிறவகைகளில் அரசு உயர்கல்வி நிறுவனங்களின் நிதியைப் பெருக்குவதற்காக , முன்னாள் மாணவர் நிதி, அறக்கட்டளை, பயிற்சிக் கட்டணத்தைக் கூட்டுதல் , தனியார் முதலீடு ஆகிய வழிகள் பின்பற்றப்படும்

5. பொருளாதார நிலையில் வாய்ப்பற்ற பிரிவினருக்குக் கல்விக் கடன் வழங்கும் தற்போதைய திட்டத்தை மேலும் பயனுடையதாக்க, பிணைய முறையினைத் தளர்த்தி எளிமையாக்கல், வட்டி அளவைக் குறைத்தல், திரும்பச் செலுத்தும் கால அளவை தற்போதைய ஓராண்டிலிருந்து இரண்டாண்டு/ மேற்பட்ட ஆண்டுகள் என நீட்டுதல் முதலிய னவற்றால் அம்முறை மாற்றியமைக்கப்டும்

6. உயர்சிறப்பு, திறமை ஆகியனவற்றை ஊக்குவிக்க செயல்திறன் அடிப்படையில் உயர்கல்வி நிறுவனங்களுக்கு நிதிவழங்கும்முறை செற்படுத்தப்படும்.

*****